விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே



சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 01 திங்கட்கிழமை (17.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 303

## ராஜபக்ஷவினரின் ஆட்சி தொடர்ந்திருந்தால்
# மகிந்தவை மக்கள் அடித்தே கொன்றிருப்பர்!
## இப்படித் தெரிவித்தார் நீதியமைச்சர் விஜயதாச

(கொழும்பு)



ராஜபக்ஷவினர் சகிதமாக மகிந்த இன்னும் இரண்டு வருடங்கள் நாட்டை ஆட்சி செய்திருந்தால் மக்கள் அவரை அடித்தே கொன்றிருப்பார்கள். அவரால் வீதிக்கு இறங்க முடியாமல் போயிருக்கும். அதற்குப் பயந்துதான் இரண்டு [illegible] ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

(23-ம் பக்.)

## பிரதமர் நேற்று பெல்ஜியம் பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பெல்ஜியம் நோக்கி பயணமாகியுள்ளார்.

எமிரேட் விமானச்சேவைக்கு சொந்தமான EK349 என்ற விமானத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடன் 8 தூதுக்குழுவினர் நேற்று

24ஆம் பக்கம் பார்க்க....

## த.தே.கூ. - ரீட்டா நாளை சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சிறுபான்மை இன விவகாரங்களை ஆராயும் விசேட அறிக்கையாளர் ரீட்டா இசாக் [illegible] சந்திக்கவுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அமைந்த

23ஆம் பக்கம் பார்க்க....

### லசந்த படுகொலை
## தற்கொலை செய்த அதிகாரியின் தொலைபேசி விபரங்கள் அழிப்பு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவை தாமே படுகொலை செய்ததாக கடிதமொன்றை எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்ததாக கூறப்படும் முன்னாள் இராணுவ புலனாய்வு அதிகாரியின் கையடக்க தொலைபேசியின் பதிவுகள் மர்மமான முறையில் அழிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளன.

இதனால் அவரது மரணம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளதால், இரகசிய பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

# இனப்பிரச்சினைத் தீர்வு ஓர் இழுத்தடிப்பு விடயம்!
## கிழக்கு முதலமைச்சர் நஸீர் தெரிவிப்பு



(ஏறாவூர்)

இனப்பிரச்சினைக்கான தீர்வு வரும் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற இவ்வேளையிலே என்னுடைய பார்வையிலே இது ஒரு இழுத் தடிப்புக்கான முன்னெடுப்பாகவே நான் பார்க்கின்றேன் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட்

23ஆம் பக்கம் பார்க்க....

## விபத்தில் காயமடைந்த ஆசிரியர் பசில் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் கடந்த 5 ஆம் திகதி ஹன்டர் வாகனம் மோதியதில் படுகாயமடைந்த ஆசிரியர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்.கொழும்புத்துறை சுவாமியார் வீதியை சேர்ந்த வணிகக்கல்வி ஆசிரியரான பெனடிக்ற் பசில் ஜெனதாஸ் (வயது 50) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 5 ஆம் திகதி மாணவர்சட

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரிக்கு ஆன்சாங் சூகி பாராட்டு

(கோவா)

இந்தியாவின் கோவாவில் இடம்பெற்றுவரும் BRICS - BIMSTEC மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மியன்மாரின் அரச சபை உறுப்பினரும் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சருமான ஆன்சாங்சூகியினை நேற்றுச் சந்தித்தார்.

ஜனநாயகத்திற்காக நீண்டகாலம் போராடிய ஆன் சாங் சூகியினுடைய சேவை தொடர்பில் ஜனாதிபதி தன்னுடைய பாராட்டுக்களை இதன் போது தெரிவித்ததோடு இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜய

23ஆம் பக்கம் பார்க்க....

## தனித்திருக்கின்ற வயோதிபர்களை குறிவைக்கும் திருட்டுக் கும்பல்!
### பல இலட்சம் ரூபாய்கள் மிரட்டிப் பறிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி முழங்காவில், பல்லவராயன்கட்டு சோலை பகுதியில் உள்ள வீட்டுக்குள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் நுழைந்த திருடர்கள், வீட்டிலிருந்த வயோதிப கணவன், மனைவி ஆகியோரை மிரட்டி உட்கார வைத்து விட்டு அங்கிருந்த பணம் மற்றும் நகை என்பவற்றை கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

4 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 36 பவுண் தங்க நகை என்பன இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முகத்தை துணியால் மறைத்துக் கட்டியபடி உள்நுழைந்த திருடர்கள் தொலைபேசியை அடித்து நொருக்கியுள்ளனர். பின்னர், வீட்டிலிருந்த வயோதிப கணவன், மனைவியை கொட்டான்களால் அடித்து மிரட்டி உட்கார வைத்து, கொள்ளையிட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

பனை அபிவிருத்திச் சபை நடத்தும்
ஞாலத்தில் புதுமை புகும் தாலம்
பனைசார் உற்பத்திகள் மற்றும் புதிய தொழில்நுட்பம் தொடர்பான கண்காட்சியும் ஆய்வரங்கம் மற்றும் விற்பனையும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
இடம் - யாழ்.மத்திய கல்லூரி
காலம் - 21, 22, 23/10/2016
நேரம் - மு.ப 10.00 - பி.ப 08.00
அனுமதி இலவசம்

## மைத்திரி - மோடி நேற்றுச் சந்திப்பு

(கோவா)

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் கோவா Taj Exotica ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கை ஜனாதிபதியை மிகவும் உற்சாகமாக வரவேற்ற இந்தியப் பிரதமர், தமது அழைப்பையேற்று BRICS- BIMSTEC மாநாட்டின் சமாந்தர மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வருகை தந்தமையானது தனக்கும் இந்தியாவுக்கும் BIMSTEC பிராந்தியத்திற்கும் பாரிய பலமென்றும் தெரிவித்தார்.

இலங்கையானது தென்னாசிய பிராந்தியத்தில் தற்போது முக்கியமான பங்கு வகித்து

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நல்லாட்சியிலும் கயவர்கள் இருக்கின்றார்கள்; தமிழ், முஸ்லிம் மக்கள் விழிப்படைய வேண்டும்

## அமைச்சர் மனோகணேசன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நல்லாட்சியை உருவாக்கிவிட்டோம் என்று நாம் ஆனந்தக் கூத்தாட முடியாது. நாம் அமைதியாக இருந்தால், எம்மைத் தூக்கி சாப்பிட்டு ஏப்பம் விடக்கூடியவர்கள் இந்த நல்லாட்சியிலேயே இருக்கிறார்கள்.

ஆகவே, எப்போதும் நாம் விழித்துக்கொண்டு இருக்க வேண்டும். இது இந்த நாட்டில் நாடு முழுதும் வாழும அனைத்து தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் பொருந்தும என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

சிறுபான்மை இன மக்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய அறிக்கையாளர் ரீட்டா ஐசக் குழுவினரை தமிழ் முற்போக்குக் கூட்டணி தூதுக்குழு அடுத்தவாரம் சந்திக்கவுள்ளது. தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சுக்கு வருகை தரவுள்ள ரீட்டா குழுவினரிடம் இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பான அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சிக்கல்கள் அனைத்தும் எழுத்து மூலமான அறிக்கையாக முன்வைக்கப்பட்டு விளக்கமளிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சின்போது நாடுமுழுவதும் சிதறி வாழும் இனக்குழு என்ற முறையில் புதிய தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பிலும், தேர்தல் பிரதிநிதித்துவத்தில் எமக்கு ஒதுக்கப்பட வேண்டிய விசேட ஒதுக்கீடுகள் பற்றியும், மலையக தமிழ இனத்தின் மிகவும் பின் தங்கிய பிரிவான தோட்ட தொழிலாளர் களின் சம்பளம் மற்றும் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பிலும், பின் தங்கிய பிரிவினர் என்ற முறையில் அவர்களை கை தூக்கிவிட வேண்டிய விசேட ஒதுக்கீடுகளை வழங்க சர்வதேச சமூகத்தை ஐ.நா. சபை வலியுறுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனநாயக இளைஞர் இணையவாராந்தர கருத்தரங்கில் உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான முன்னறிக்கையில் எனது அமைச்சுக்கு போதிய நிதியை ஒதுக்குவதில் ஒரு குறைபாடு ஏற்பட்டது. அதேபோல் எனது அமைச்சின் பணிகளில் முன்னறிவித்தல் இன்றி ஒரு முன்னாள் அரசியல்வாதி தலையிடும் நிலைமையும் ஏற்பட்டது. நான்தான் தூங்குவதில்லையே. அதனால் எழுந்து நின்று சத்தம் போட்டதால் அந்தப் பிரச்சினைகள் இன்று முடிவுக்கு வந்துள்ளன.

அதேபோல் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பிலும் நாம் உரிய அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம். அவை பற்றி தெரியாத விடயங்கள் விரைவில் தெரியவரும். இன்று நாம் பேச்சுகளை நடத்தி, கையெழுத்துப்போட இடம் கொடுத்து ஒத்துழைக்கின்றோம். இப்போது மூடிய அறைக்குள் இரகசிய பேச்சுகள் இல்லை. அரசை இந்த விடயத்தில் முன்னெபபோதும் இல்லாத விதத்தில் இழுத்து வட்டுள்ளோம்.

இது எமது அழுத்தம் காரணமாகவே நடக்கின்றது. ஒபபந்தம், [illegible] ஒவ்வொன்றும் உழைக்கும் மக்களுக்குத் தெரிகின்றது. எமது இனத்தின் மிகவும் பின் தங்கிய பிரிவினரின் வாழ்வாதார விவகாரத்தில் அரசியல் செய்ய நாம விரும்பாததால், இப்போது அமைதி காக்கின்றோம்.

எந்தப் பேயுடனாவது ஒத்துழைத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனம் தயாராக இருககின்றது. இதை இந்தக் கையெழுத்து குழுக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனினும், நாம் சும்மா இருக்கப் போவதில்லை. மலைநாட்டு தோட்டத தொழிலாளர்கள் இந்த அளவுக்கு இழுத்தடிக்கப்படுவதன் காரணம் அவர்கள் தமிழர்கள் என்பதால்தான் என்ற உண்மையைப்புரிந்துகொளள நாம் விண்வெளி விஞ்ஞானம் படிக்க வேண்டியதில்லை. அதை எந்த ஒரு சின்ன குழநதையாலும் புரிந்துகொள்ள முடியும். எனவேதான், இந்தப் பிரச்சினையும் சிறுபான்மை இன மக்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய அறிக்கையாளர் ரீட்டா ஐசக்கின் கவனத்துக்குக் கொண்டு செல்ல நாம் தீர்மானித்துள்ளோம்.



மலையக தமிழ் இனத்தின் மிகவும் பின் தங்கிய பிரிவான தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பிலும், பின் தங்கிய பிரிவினர் என்ற முறையில் அவர்களைக் கைதூக்கி விட வேண்டிய விசேட ஒதுக்கீடுகளை வழங்க ஐ.நா. சபை சர்வதேச சமூகத்தையும், இலங்கை அரசையும் வலியுறுத்த வேண்டியதன் அவசியம் பற்றிப் பேசுவோம்.

அரசுக்குள் இருந்து நாமும் வலியுறுத்தும்போது, வெளியில் இருந்து ஐ.நாவும் வலியுறுத்தும் போதுதான் இங்கே காரியம் நடக்கும் என்பது எவரையும்விட எனக்கு நன்றாகத் தெரியும்.

அதேபோல் உத்தேச தேர்தல் முறையில், இந்நாட்டில் சிதறி வாழும் சிறுபான்மையினர் என்ற முறையில் நாம் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் நாம் எடுத்துக் கூறுவோம்.

எனது அமைச்சுக்கு எம்மைத் தேடிவரும், சிறுபான்மை இன மக்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய அறிக்கையாளர் ரீட்டா ஐசக் குழுவினருக்கு, புதிய உள்ளூராட்சி கட்டமைப்புகள், காணி உரிமை, வீடமைப்பு, மொழியுரிமை உட்பட மலையக சிறுபான்மை மக்களின் உரிமை தேவைகள் பற்றி எடுத்துக்கூற தமிழ முற்போக்குக் கூட்டணி தயாராக இருக்கின்றது.

இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தனதுரையில் தெரிவித்தார். (செ)

---

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

குப்பிழான் திரு. கந்தையா கிருஷ்ணன் (சிங்கப்பூர்)



ஆவது 99 பிறந்தநாள் 17.10.2016

கிராமத்துக்கு பல சமூக சேவை வழங்கி மகிழ்ந்துவரும் தங்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

குப்பிழான் விக்னேஸ்வரா பழைய மாணவர் சார்பில் திரு.தி.ரவீந்திரநாதன் (M.A) அதிபர்

(C-6141)

---

## கண்ணீர் அஞ்சலி

பெனடிக்ற் பசில் ஜெனதாஸ் (BBA)



ஆசிரியரும் வணிகக்கல்விக்கு நீண்ட காலமாக சேவையாற்றியவருமான பெனடிக்ற் பசில் ஜெனதாஸ் (BBA) அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-6142)

Beacon கல்வி நிறுவனம் வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
இயக்குநர், ஆசிரியர்கள்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி மஞ்சுளா செல்வரத்தினம்



ஆவரங்காலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட "சோபிதாஸ் ஸ்ரோர்ஸ்" உரிமையாளருமான திருமதி மஞ்சுளா செல்வரத்தினம் அவர்கள் 16.10.2016 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிற்றம்பலம் தங்கரத்தினத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் ஷர்மிளி, ஷோபிதா, காலஞ்சென்ற தர்ஷிகா மற்றும் அரிபவன், தீவிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், முரளீஸ்வரன், சிவகுமாரின் அன்பு மாமியாரும், நாதன், விஜயன், ஸ்ரீ, இந்திரன், தயாளன், மல்லிகா, மோகனா, மேனகா அவர்களின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 18.10.2016 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோபிதாஸ் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்.
0773164403

தகவல் :-
குடும்பத்தினர்

(6352)

---

## கலாசாலையின் கண்ணீர்க் காணிக்கை

### திருமதி சிவஞானவதி வயித்திலிங்கம்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆங்கில விரிவுரையாளர் செல்வி வசந்தி வயித்திலிங்கம் அவர்களின் அன்புத் தாயார் திருமதி சிவஞானவதி வயித்திலிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

(C-6140)

கலாசாலைச் சமூகம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு துன்னாலையில் அமைந்துள்ள ஶ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் சமுத்திரத் தீர்த்தோற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வெகு விமரிசையாக இடம்பெற்றது.

ஆலயத்தில் இருந்து புறப்பட்ட ஆழ்வார் சக்கரம், வங்களா விரிகுடாவை அண்மித்து அமைந்துள்ள கற்கோவளம் கடற்பரப்பை சென்றடைந்து மாலை 5.30 மணியளவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ தீர்த்தோற்சவம் சிறப்பாக இடம்பெற்றது.

(படம்:- கரணவாய் செய்தியாளர்)

# போரால் தமிழ் மக்கள் மத்தியில் எதிர்மறையான எண்ணங்கள் மேலும் வலுவடைந்துள்ளன



## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்கள் மத்தியிலுள்ள எதிர்மறையான எண்ணங்கள் கடந்த காலப் போரின் மூலம் மென்மேலும் வலுவடைந்துள்ளன என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.**

யாழ். அறிவுத்திருக்கோவில் திறப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள அறிவுத்திருக்கோவிலில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் .

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் பலவிதமான கஷ்டங்களை அனுபவித்தனர். எமக்குள்ளே பலவிதமான மன வடுக்கள் உள்ளன. எங்களிடையே எதிர்மறையான எண்ணங்கள் அதிகளவில் உள்ளது என பலர் குறிப்பிடுகின்றனர்.

அந்த எதிர்மறையான எண்ணங்களை மேலும் வலுப்படுத்துவதாகவே எமது பழக்கவழக்கங்களை கடந்த 30 வருட கால போர் ஏற்படுத்தியுள்ளது. எதை யார் சொன்னாலும் ஏற்றுக் கொள்வதில்லை. ஏன் எதற்கு எப்படி என கேட்பது சிறந்த விடயமாக இருந்தாலும் எல்லோர் மேலும் எப்பொழுதும் சந்தேகம். அதாவது சரியானவற்றை சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் எம்மை விட்டு வெளியே போய்விட்டது.

அந்த வகையில் மனவளக்கலையை சிறு வயதில் இருந்து வளர்ப்பது மிக அவசியமாகும்.நல்ல பழக்க வழக்கங்கள் எமது சமுதாயத்தை விட்டு தூரமாக சென்றுவிட்டது. நாம் மீண்டும் அதை கொண்டு வரவேண்டும் என்றால் நல்ல பழக்கவழக்கங்களை மிக சிறிய வயதில் இருந்து சொல்லி கொடுத்தால் நன்மையாக இருக்கும்.

தற்போதைய நவீன தொழில்நுட்பகாலத்தில் இவ்வாறான மனவள கற்கைக்குள் இளையவர்களை உள்வாங்குவது கடினமாக இருக்கும். நவீன தொழில்நுட்ப பாவனைகள் இங்கு வருவதற்கு முதல் இந்த மனவள கற்கையை ஆரம்பித்திருந்தால் மிக அதிகளவு மாணவர்களை கொண்டு வந்திருக்க முடியும்.

எம்மை நாமே ஒருமுகப்படுத்தி குறித்த ஒரு நேரத்தை இறை வணக்கத்துக்கும் எமது வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதற்கும் நேரத்தை ஒதுக்க வேண்டியது மிக மிக அவசியம். முற்றவர்களுக்கு சொல்வது இலகு. ஆனால் நாம் அதை கடைப்பிடிப்பது கடினம். ஆனால் இப்படிப்பட்ட நல்ல விடயங்களில் நாம் ஒன்றாக செயற்பட வேண்டும். எம் சமூகத்தை நல்வழிப்படுத்த இவ்வாறான மனவள பயிற்சி மிக அவசியம்.

போரினால் ஏற்பட்ட பழக்க வழக்கம் பல அதில் பக்கத்து வீட்டில் கேட்பார் இல்லாத பொருள்களை எம் வசப்படுத்தி கொள்ளும் பழக்கங்களை ஏற்படுத்தி கொண்டுள்ளோம்.

ஏனையவர்களின் பொருட்களில் ஆசைப்படுவது சரியா? எனது தொழிலை சரியாக செய்கிறேனா? சம்பளத்துக்கு ஏற்ற வேலையை செய்கிறேனா என்று சிந்திக்க முடியாத நிலையில் உள்ளோம். ஒவ்வொருவரும் தமக்கு கொடுக்கப்படும் வேலைகளை சரியாக செய்தாலே எமது சமுதாயம் முன்னேற தடங்கல் இருக்காது. எமது கடமை என்ன என்பதை பண்படுத்த மனவளக்கலை மிகவும் உதவியாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மோடியுடன் மைத்திரி இந்தியாவில் சந்திப்பு



இந்தியாவின் கோவாவில் இடம்பெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் வைத்து நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தது தமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாக மைத்திரிபால சிறிசேன தனது உத்தியோக பூர்வ வலைத்தளமாக டுவிட்டரில் பதிவேற்றம் செய்துள்ளார். 8 ஆவது தடவையாக நடைபெறும் இந்த பிரிக்ஸ் மாநாட்டிற்கு இந்த முறை இந்தியா தலைமை ஏற்கின்றது.

இந்த மாநாட்டில் பிரிக்ஸின் உறுப்பு நாடுகளான பிரேசில் ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிலையில் வங்காள விரிகுடாவின் பிம்ஸ்டாக் என்ற பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டு என்ற அடிப்படையில் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாநாட்டில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழில் அதிக வெப்பம் காரணமாக 13 ஆயிரத்து 841 பேர் பாதிப்பு

## புள்ளிவிபரத் தகவலில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்ட அதிக வெப்ப கால நிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் 13 ஆயிரத்து 841 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலக புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தொடர்ச்சியான வெப்ப காலநிலை நிலவி வருவதால் மக்கள் மற்றும் கால்நடைகள் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருகின்றன. அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 28 கிராம சேவகர் பிரிவுகளிலும் 4 ஆயிரத்து 260 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 841 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மிக முக்கியமாக நீர்த் தேவையை பூர்த்தி செய்ய வேண்டியுள்ள காரணத்தால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மாவட்டச் செயலகம் ஊடாக இவர்களுக்கான நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இருப்பினும் மாவட்டச் செயலகத்தில் தற்போது நீர்விநியோகத்தை மேற்கொள்வதற்கு 3 பவுசர்களே உள்ளன என்றும் மக்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்குவதற்கு மேலும் 5 பவுசர்கள் தேவை என மாவட்டச் செயலகத்தால் அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் நீர்விநியோகத்துக்கு 3. 5 மில்லியன் ரூபாய் தேவை எனவும் கோரப்பட்டு மக்களுக்கு நீர்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனால் தொடர்ச்சியாக வெப்ப காலநிலை நிலவுமேயானால் அடுத் தடுத்த பிரதேசங்களுக்கும் நீர்விநியோகம் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட வரட்சி போன்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதனால் வெப்ப காரணமாக மக்களின் வாழ்வாதாரம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவது மிக முக்கியமானதொன்றாகும்.

அத்துடன் வெப்பநிலை தாங்காது பல பகுதிகளில் கால்நடைகள் இறப்பும் அதிகரித்து வரும் மோசமான நிலை ஏற்பட்டுள்ளது. (இ-9)


ரொம் லேதம்

# ஹர்த்திக் பாண்டியா, விராட் ஹோலி கலக்கல்
# ஒரு நாள் தொடரை ஜோராக ஆரம்பித்தது இந்தியா

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் விராத் ஹார்திக் பாண்டியாவின் பந்துவீச்சும் ஹோலியின் அரைச் சதமும் கைகொடுக்க இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்று தொடரை ஜோராக ஆரம்பித்துள்ளது.

இந்தியா சுற்றுப் பயணம் மேற்கொண் டுள்ள நியூசிலாந்து அணி அங்கு 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. டெஸ்டில் அசத்திய இந்திய அணி தொடரை 3:0 என முழுமையாக கைப்பற்றியது.

இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி நேற்று இமாச்சல பிரதேசத்தில் உள்ள தரம்சாலாவில் நடந்தது.

இது, ஒரு நாள் அரங்கில் இந்திய அணி பங்கேற்ற 900ஆவது போட்டியாகும்.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் தோனி களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் ஹர்திக் பாண்டியா அறிமுக வாய்ப்பு பெற்றார்.

**அசத்தல் 'வேகம்'**

நியூசிலாந்து அணிக்கு இந்திய 'வேகங்கள்' தொல்லை கொடுத்தன. பாண்டியா பந்தில் கப்டில் (12) ஆட்டமிழந்தார. உமேஷின் வேகத்தில் வில்லியம்ஸன் (3), றோஸ் ரெய்லர் (0) ஒற்றை இலக்கில் திரும்பினர். மீண்டும் பந்துவீச வந்த பாண்டியா இம்முறை கோரி அண்டர்சன் (4), லூக் ரோஞ்சியை (0) வெளியேற்றினார். கேதர் ஜாதவ் 'சுழலில்' நீஷம் (10), சான்டனர் (0) சிக்கினர். பிரேஸ்வெல் 15 ஓட்டங்கள் எடுத்தார்.

**லேதம், சௌதி அசத்தல்**

பின் இணைந்த லதாம், சௌதி ஜோடி பொறுப்புடன் செயல்பட்டது. லதாம் அரைச்சதம் கடந்தார். அதிரடியாக விளையாடிய சௌதியும் அரை சதம் விளாசினார்.

மிஸ்ரா 'சுழலில்' சிக்கிய சௌதி 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இஷ் சோதி ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார்.

இறுதியில் நியூசிலாந்து அணி 43.5 ஓவர்களில் 190 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. லேதம் (79) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக பாண்டியா, அமித் மிஸ்ரா ஆகியோர் தலா 3 விக்கெடடுக்களைக் கைப்பற்றினர்.

**ஹோலி அரைச்சதம்**

எளிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ரோகித், ரஹானே ஜோடி அதிரடி ஆரம்பம் கொடுத்தது.

ரோகித் 14 ஓட்டங்கள் எடுத்தார். நீஷம் பந்தில் ரஹானே (33) ஆட்டமிழந்தார். மணிஷ் பாண்டே 17 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின் இணைந்த ஹோலி, அணித் தலைவர் எம்.எஸ் தோனி ஜோடி எதிரணி பந்துவீச்சை எளிதாக சமாளித்தது. ஹோலி அரைச்சதம் விளாசினார்.

தோனி (21) ரன்-அவுட்டானார். வெற்றிக்கான 3 ஓட்டங்களை ஹோலி சிக்ஸர் அடித்து பறக்கவிட, இந்திய அணி 33.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஹோலி (85), கேதர் ஜாதவ் (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நியூசிலாந்து சார்பில் பந்துவீச்சில் பிரஸ்வெல், நீஷம், சோதி தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அறிமுகப் போட்டியில் பிரகாசித்த இந்திய அணியின் பாண்டியா தெரிவானார்.

**900**

ஒரு நாள் அரங்கில் 900 ஆவது போட்டியில் பங்கேற்ற முதல் அணி என்ற சாதனையை இந்தியா வெற்றியுடன் கொண்டாடியது. இந்தியா 900 போட்டிகளில் 455 வெற்றி, 399 தோல்வி, 7 சமனிலை, 39 போட்டிகளுக்கு முடிவுகள் இல்லை.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒரு நாள் போட்டி 20ஆம் திகதி டெல்லியில் நடைபெறுகிறது. (க)


தோனி - ஹோலி

# தமிழர்களது அபிலாசைகளை நிறைவேற்றாவிடின் அரசியல்யாப்புச் சபையிலிருந்து விலகுவோம்!

## அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

தமிழ் மக்களது அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் புதிய அரசியல் யாப்பு உருவாவது சாத்தியமில்லை என்று அறிந்து கொண்டால், உடனடியாகவே அரசியல் யாப்புச் சபையில் இருந்து வெளியேறி விடுவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

வவுனியாவில் நேற்று தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களுடன் இடம் பெற்ற சந்திப்பில், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமனற உறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

"புதிய அரசியல் யாப்பை தயாரிப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அரசியல் யாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அரசியல்யாப்பு தயாரிப்புப் பணிகள் தொடர்பில் ஒரு சில விடயங்களை அங்கு குறிப்பிட்டார்.

தந்தை செல்வா அரசியலமைப்பு சபையிலே உரையாற்றும்போது, நாங்கள் எவ்வளவுதான் எத்தனித்தோம். ஒவ்வொரு தீர்மானமாக தர்மலிங்கம் 6 தீர்மானங்களை முன்வைத்தார். இறுதியாக முனவைத்த தீர்மானம் சமஷ்டியாக கூட கிடையாது. இறுதியாக கச்சேரிகளை மக்கள் தேர்ந்தெடுக்கின்ற அமைப்புகளாக மாற்றுங்கள் என்பது தான் அந்த பிரேரணை. அதைக் கூட 86 க்கு 14 என்று நீங்கள் தோற்கடித்துவிட்டீர்களே. இனிமேல் நாங்கள் இதில் பங்குபெறுவதில் அர்த்தமில்லை. ஆனால் இதை ஒரு பெரிய நாடகமாக நாங்கள் வெளிநடப்பு செய்தோம் என்று காட்டாமல் இருப்பதற்காக நான் இப்போது வெளிநடப்பு செய்யவில்லை. நாளையிலிருந்து நாங்கள் வரமாட்டோம் என்று சொன்னார்.

அதுதான் அவருடைய பேச்சு. அதற்கு இன்றும் மதிப்பிருக்கின்றது. அவ்வாறு பேசினார் என்பதற்கு மதிப்பிருக்கின்றது. ஆகவே எங்களுடைய செயற்பாட்டிலே நாங்கள் ஆரவாரத்துக்காக அல்லாமல் சர்வதேச அங்கீகாரத்துக்காக நாங்கள் செய்ய வேண்டி ஏற்பட்டால் நாங்கள் செய்வோம். ஆனால் மக்களுடைய அபிலாசைகளை அடையக் கூடியதாக ஒரு அரசியலமைப்புச் சட்டம் உருவாகுவதற்கு ஒரு சதவீதமேனும் வாய்ப்பு இருக்கும்வரை நாங்கள் அதைக் கைவிடமாட்டோம்.

ஏனெனில் எங்களுடைய மக்களுக்கு இது மிகவும் தேவையானதொன்று. ஆனால் வெளியிலே பலர் கொக்கரிக்கின்றார்கள் என்பதற்காக நாங்கள் அதனை விட்டுவிட்டு ஓடி வரப்போவதில்லை. மக்கள் வேறு எந்தக் கட்சியிடமும் இந்தப் பொறுப்பைக் கையளிக்கவில்லை. வெவ்வேறு கருத்துக்கள் தேர்தல் காலங்களில் தெரிவிக்கப்பட்டன. எனினும் அவை பொது மக்கள் மத்தியில் எடுத்துக்கொள்ளப்பட வில்லை. எதை அடைவோம் என்று நாங்கள் சொன்னோமோ அவ்வாறான பாரிய பொறுப்பு எங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

ஆகவே அதை நிறைவேற்றும் வரை அதாவது அது முடியாவிட்டால் சொல்லுவோம். அனை நிறைவேற்றக்கூடிய சிறிய சந்தர்ப்பம் இருக்கும் வரை நாங்கள் அதற்காக பாடுபடுவோம். ஏனெனில் எமது மக்கள் இனியும் ஒரு அழிவைச் சந்திக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவிடம் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டார்கள், நீங்கள் இவ்வாறு கூறுகின்றீர்கள் அவ்வாறு நிறைவேற்ற முடியாவிட்டால் எல்லோரும் சேர்ந்தா இராஜினாமா செய்வதென்று. அதற்கு அவர் சொன்னார் இந்த சந்தர்ப்பத்திலே இது நடக்க வேண்டுமாக இருந்தால் இது நடக்கும். அவ்வாறு தவறினால் அது நடக்காது. ஆகவே அதனை நடக்க வைக்கவேண்டும். நடக்க வைக்க வேண்டுமானால் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் செயற்பட வேண்டும். எனவே அவருடன் இணைந்து நாங்கள் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (செ-11)

# பேருந்தின் மீது கும்பலொன்று தாக்குதல்




யாழ்ப்பாணத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தொன்றின் மீது கும்பலொன்று தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

கச்சேரிப் பகுதியில் வைத்து நேற்று மாலை இந்தத் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது.

பட்டா வாகனத்தில் வந்த 10க்கும் மேற்பட்டவர்கள் பேருந்தின் மீது தாக்குதலை மேற்கொண்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்துயாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பேருந்தின் மீதே யாழ். கச்சேரிப் பகுதியில் வைத்து அதன் பின்னால் சென்ற பட்டாரக வாகனத்தில் வந்த கும்பலொன்று வழிமறித்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் தாக்குதலுக்குள்ளான நிலையில் நடத்துநரிடமிருந்து பணப்பையையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்தச்சம்பவம்தொடர்பாகயாழ். பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ)

# விசர்நாய்க்கடி நோய்க்கு இளைஞன் பலி

## நண்பர்களை பாதுகாத்தவர் தன்னை பாதுகாக்க தவறிய சோகம்

நாயின் நகக்கீறல் காரணமாக ரேபிஸ் எனப்படும் நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டு இளைஞனொருவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். களுவன்கேணி கிராமத்தைச் சேர்ந்த டேவிட் இன்பராஜா (வயது 23) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரும் இவருடைய நண்பர்களான மற்றைய இருவரும் களுவன்கேணி நாகதம்பிரான் ஆலயத்தில் பணி செய்துவிட்டு கோயில் வாசலில் தூங்கிக் கொண்டிருந்துள்ளனர். அதிகாலை நேரம் நண்பர்கள் இருவரும் நாய்க்கடிக்குள்ளானர். பாதிப்புக்குள்ளான நபருக்கு நாயின் பற்கள் படவில்லை. எனினும் நாயின் நகக்கீறல்கள் காணப்பட்டதாகவும் கூறி மூவருமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தன்னுடைய இரண்டு நண்பர்களுக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கு இவரே உதவியாக இருந்துள்ளார். எனினும் தனக்கு நகக்கீறல்கள் மாத்திரம் காணப்பட்டமையால் தனக்கான தடுப்பூசியை ஏற்றுவதற்கு அவர் நினைக்கவில்லை.

கடந்த 12ஆம் திகதி அன்று பாதிக்கப்பட்ட நபருக்கு திடீரென்று தலைவலி ஏற்பட்டுள்ளது. எனினும் அது குறித்து பொருட்படுத்தாக அவர், அடுத்த நாள் 13ஆம் திகதி குளிப்பதற்காக தயாரான போது, திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டு அவசரமாக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனை முடிவில் "ரேபிஸ்" எனப்படும் நீர் வெறுப்பு நோய் காரணமாகவே குறித்த நபர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. (செ-11)

# புதிய முறையில் தூதுவர்கள் நாடுகளுக்கு நியமிக்கப்படுவர்

புதிய முறையில் சில நாடுகளுக்கு தூதுவர்கள் நியமிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 22 நாடுகளுக்கு வதிவிடமற்ற 14 தூதுவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் சில வாரங்களில் இந்த நியமனாங்கள் மேற்கொள்ளப்படவுள்ள தாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சினால் இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இடையில் நடைபெறும் விசேட பேச்சுவார்த்தையின் பின்னர் இந்தப் பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இதேவேளை, நாட்டின் பிரபல்யமான வர்த்தகர்கள், தொழில்சார் நிபுணர்கள் இந்தப் பதவிகளில் அமர்த்தப்படவுள்ளனர்.

எனினும் இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விவசாயிகள் வாரத்தை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கல்





விவசாயிகள் வாரத்தினை முன்னிட்டு கரவெட்டி கமநல சேவை திணைக்களத்தின் ஏற்பாட்டில் 82 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், சேமிப்பு சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டன.

கரவெட்டி கமநல சேவை திணைக்களத்தில்கடந்த வெள்ளிக்கிழமை பெரும்பாக உத்தியோகத்தர் தலைமை யில் நடைபெற்ற நிகழ் வில் இவை வழங்கப் பட்டன.

நெல்லியடி சிதம்பரப்பிள்ளை புத்தக சாலை உரிமையாளரால் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதேபோன்று இலங்கைவங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றால் வங்கி வைப் புப் புத்தகங்களும்வழங்கப் பட்டன. இந்நிகழ்வில் கமநல திணைக்களத்தினர் கர வெட் டிப்பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ, சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை உரிமையாளர், வங்கி அதிகாரிகள் எனப்பலர்கலந்துகொண்டிருந்தனர். (இ-60)

# மரண அறிவித்தல்

## திருமதி கெப்சி றொசலீன் டயசிறி



அரசடி வீதி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி. கெப்சி றொசலீன் டயசிறி** 12.10.2016 புதன்கிழமையன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் டயசிறியின் அன்பு மனைவியும் டான் நேலக்கவின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- புனிதம் தம்பதிகளின் அன்பு மகளும் ஏஞ்சலீன், றஞ்சன், ஈவா, செல்வினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அஸ்பெரி மற்றும் கமலா, வண.ஞானப் பொன்ராஜா, சாமுவேல் தேவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 17.10.2016 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் பண்டத்தரிப்பில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அரசடி வீதி,**
**பண்டத்தரிப்பு.**
**077 715 4093** (6344)

**தகவல்:-**
**வண.ந.ஜே.ஞானப்பொன்ராஜா**
**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

## ஆபரணங்களை திருடிய நால்வர் கைதாகினர்

கொழும்பு ஆட்டுப்பட்டிதெரு, ஜோகுரு வீதி பிரதேசத்தில் மூன்று கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும்பணத்தை கொள்ளையிட்ட நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ள னர்.

இந்த சந்தேக நபர்களை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கல்னேவ பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கடந்த மாதம் 17 ஆம் திகதி தங்கஆபரணங்களை தயாரிக்கும் நிறுவனத்திற்குள் நுழைந்து, அங்கிருந்த ஊழியர்களை தடுத்து வைத்து விட்டு தங்க ஆபரண ங்களையும் பணத்தை கொள்ளையிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து , கல்னேவ மற்றும் கேகாலை பிரதேசங்களை சேர்ந்த இந்த நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-7)


YMCA JAFFNA

**Young Men's Christian Association, Jaffna proudly presents**

## The Best Performance Appreciation Award

for Students of GCE A/L Examination 2015, Northern Province

First Rank: Rs.40,000/= Cash Prize, Shield & Certificate
Second Rank: Rs.20,000/= Cash Prize & Certificate

*Chief Guest*
**Honourable T.Gurukularajah,**
Provincial Minister of Education, Cultural Affairs, Sports & Youth Affairs, Provincial Council, Northern Province.

***Special Guests***
**Mr. N. Vethanayahan,**
Govt. Agent / District Secretary, Jaffna District.

**Mr.R.Raveenthiran**
Provincial Secretary of Education, Cultural Affairs, Sports and Youth Affairs, Education Ministry, Northern Province.

**Mr.S.Uthayakumar**
Director, Provincial Department of Education, Northern Provincial Council.

**Mr.N.Theivendrarajah**
Zonal Director of Education, Jaffna

We have great pleasure in inviting the Members and Well-wishers to participate at the Award Ceremony to be held on Wednesday the 19th October 2016 at 4.00pm, at the YMCA, Main Hall.

*President, Board of Directors,*
*General Secretary & Staff, YMCA Jaffna.*
(C-6134)


# இராசி பலன்

17.10.2016
(ஐப்பசி 01, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பிரதமை காலை 8.40 மணிவரை
துதியை பின்னிரவு 5.53 மணிவரை
அச்சுவினி முற்பகல் 11.01மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7-32-9.02 மணிவரை
சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அத்தம், சித்திரை<br>பகல் 12.36 மணிக்கு<br>மேட-சந் | | |
| | | | ராகு |
| செவ் | சனி<br>சுக் | புதன்,<br>சூரி | குரு |

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்,பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், இறை -வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு,பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும்.

**இடபம்:** நண்பர்கள் தொடர்பான சில செலவுகள் ஏற்படலாம், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றையும் செய்து காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும்,செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், போசன சுகமுண்டு தேகநலனில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்:** பிறர் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்,செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு,மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்:** தொழிலில் ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்,வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்,

**தனுசு:** வியாபாரம், தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, நெடுநாளைய திட்டமொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பயணங்களால் பலனுண்டு, தொழில் முன்னேற்றமுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு,செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்,பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.



உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய தொண்டர் சபையினர் நடத்தும் அறநெறிக் கழகத்தின் வாணிவிழா அண்மையில் இடம்பெற்றபோது கற்பக விநாயகர் ஆலயத்திலிருந்து விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அறநெறி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:கோபி)

## கலை மற்றும் மொழி வகுப்புக்களை கற்பிக்க வளவாளர்களைத் தெரிதல்

(யாழ்ப்பாணம்)

உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக 2017 ஆம் ஆண்டு திறமை மேம்பாட்டு நிகழ்ச்சிக்காக சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் அமைக்கப்பட இருக்கும் கலாசார மத்திய நிலைய, தற்காலிக கலாசார மத்திய நிலையத்தில் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகள் நடைபெற இருப்பதனால் இப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வளவாளர்களை (ஆசிரியர்கள்) தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விபரங்களை 12.11.2016 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் வடலியடைப்பு, பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

## யாழ். நாகவிகாரை பெரஹரா பூஜை

யாழ்.ஸ்ரீநாகவிகாரை வருடாந்த பெரஹரா பூஜை நிகழ்வு எதிர்வரும் 23.24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகம், ஏனைய பாதுகாப்பு பிரிவு, பொலிஸ் மற்றும் சிவில் சமூகத்தினரின் ஒத்துழைப்புடன் இந்த பெரஹரா நடைபெறவுள்ளது.

அந்த வகையில் இந்த நிகழ்வானது எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை யாழ். துரையப்பா விளை யாட்டு மைதானத்துக்கு அண்மை யிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு சிங்கள இந்து கலாசார முறைகள் உள் ளடக்கப்பட்ட அலங்கார பெரஹரா காங்கேசன் துறைவீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக வந்து வேம்படி சந்தியினூடாகச் சென்று பாலாலி வீதியினூடாக யாழ்.நாக விகாரையை வந்தடையும் எனவும் இதில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கு மாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-൭)

# சீமாவுடன் EP அக்கடமி இணைவு




(யாழ்ப்பாணம்)

இ.பி. அக்கடமி (Exam point Academy) சீமாவுடன் பட்டய முகாமைக்கணக்காளர்நிறுவனம் (CIMA) இணையும் நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கொழும்பிலிருந்து வருகை தந்த சீமா நிறுவனத்தின் தலைவர் ரட்லி ஹறெப்ஹன், சந்தைப்படுத்தல் மேலாளர் சிவசுப்பிரமணியம் விதுஷன், லண்டன் பட்டய முகாமைக் கணக்காளர், நிறுவன கற்றல் தலைவர் கிராண்சி பீரிஸ், பட்டய முகாமைக் கணக்காளர், நிறுவன பாடத்திட்டத்தலைவர்ஷேன்பல்ஷான், பரீட்சைப்புள்ளிநிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி குணா கருணா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பட்டய முகாமைக்கணக்காளர் நிறுவன (CIMA) பிரதிநிதிகள் பரீட்சைப்புள்ளி அக்கடமியின் விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்தனர்.

மேலும் வகுப்பறை பரீட்சை வசதிகளை பார்வையிட்டு பாராட்டினர். ஷேன் பல்ஷான் தெரிவிக்கையில், பரீட்சைப் புள்ளி அக்கடமியின் வகுப்பறை கணனி ஆய்வகங்கள் வசதிகளைப் பார்க்கும் போது ஐரோப்பாவில் உள்ள வசதிகளை ஒத்ததாக காணப்படுவது மட்டுமன்றி யாழ்ப்பாண மாணவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றும் இனிமேல் மாணவர்கள் கொழும்புக்கு பிரயாணம் செய்ய வேண்டிய தேவை இல்லை என்றும் கூறினார். மேலும் பட்டய முகாமைக்கணக்காளர் நிறுவனத்தின் நாடுகளுக்கிடையிலேயான தலைவர் தெரிவிக்கையில்,

இலங்கையில் யாழ்ப்பாணமானது கல்வியில் முக்கியத்துவமான இடமாகும். இதில் எந்தவித சந்தேகமின்றி நாங்கள் யாழில் பரீட்சைப் புள்ளி அக்கடமியுடன் கைகோர்த்து மாணவர்களுக்கும் பொறுப்பாதிகாரிகளுக்கும் பூரண ஆதரவை வழங்குவது மட்டுமன்றி அவர்களுக்கான சிறந்த அடித்தளத்தை வழங்குவோம் எனக் கூறினார். இந்நிகழ்வில் கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பரீட்சைப்புள்ளி அக்கடமி (Exam point Aca demy) கற்கும் மாணவர்களின் நலன் கருதி இலவசமாக ஆங்கில கற்கை நெறிகள் தட்டச்சு பயிற்சி ஆகியவற்றையும் இலவசமான பரீட்சைகளையும்வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## பரிசளிப்பு விழா

குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை கிருஷ்ணா அரங்கில் அதிபர் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவ மனோகரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன், யாழ். போதனா வைத்தியசாலை சிறப்பு வைத்திய நிபுணர் சிவ.அரவிந்தன் கௌரவ விருந்தினராக கமநல சேவைத் திணைக்கள கணக்காளர் கு.சுரேஷ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-136)




# சமாதான நீதிவான்களாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

காரைநகர் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் அண்மையில் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி ஏ.எம். மொகமட் றியால் முன்னிலையில் மத்தியஸ்தர் சபை உறுப்பினராக இருக்கும் காலத்திற்குள் ஊர்காவற்றுறை நீதி நிர்வாகத்திற்கான சமாதான நீதவான்களாகச் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

இவர்கள் 15.12.2011 ஆம் திகதி தொடக்கம் காரைநகர் மத்தியஸ்தர் சபையின் உறுப்பினர்களாக சேவையாற்றி வருகின்றனர். சந்தையா நேத்திரானந்தன், நல்லதம்பி கிருஷ்ணபவன், திருநாவுக்கரசு பிரபாகரன், அம்பலவாணர் நவரத்தினம், நாகப்பு வேலுப்பிள்ளை, கந்தசாமி இராஜசந்திரன், வேலுப்பிள்ளை பரமசிவம்பிள்ளை, இரத்தினம் ஜெயராமன், திருமதி தர்மலிங்கம் இராசேஸ்வரி, திருமதி கனகலிங்கம் மகேஸ்வரி, திருமதி சந்திரலிங்கம் யோகேஸ்வரி. (இ-246)

# உளவியல் கண்காட்சி நாளை யாழில் ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மெய்யியல், உளவியல் துறை மாணவர்களால்உலக உளநலநாளை முன்னிட்டு உளவியல் கண்காட்சியானது கலைப்பீட கீழ் தள கட்டடத்தில் நாளை 18 ஆம் திகதியும் நாளை மறுதினம் 19 ஆம் திகதியும் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொண்டு கண்காட்சியை காலை 8.30 மணியளவில் ஆரம்பித்து வைப்பார். (இ



எசட்லைன் லீசிங் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். நீரிழிவு கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்பூட்டல் பதாதைகளை செயலகத்தில் காட்சிப்படுத்த யாழ். மாவட்ட செயலரிடம் அண்மையில் கையளித்தபோது...



கரவெட்டி கமநலசேவை நிலைய பிரிவிற்குட்பட்ட விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட மரக்கறிகள், பழங்கள் என்பன கமநல நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. சேதனப்பசளை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி, பழங்களை கரவெட்டி பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி. வி.தனபாலசிங்கம் பார்வையிட்டார். (படங்கள்: - கரணவாய் செய்தியாளர்)

## மாற்றான்தாய் மனப்பான்மையுடன் தொடர்ந்து நடத்தினால்

# ஐ.தே.கவுக்கு சிவப்பு அட்டை; சு.க.காட்ட வேண்டியேற்படும்

## அமைச்சர் டிலான் எச்சரிக்கை



ஐக்கிய தேசியக்கட்சி எம்மை தொடர்ந்து மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நடத்துமானால் விரைவில் அரசாங்கத்திலிருந்து வெளியேறும் நிலைமை உருவாகும். இதனைத்தான் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருக்கிறார். இது தொடர்பில் ஜனாதிபதி இரண்டு மஞ்சள் அட்டைகளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு காட்டிவிட்டார். தற்போது சிவப்பு அட்டையை காட்டவேண்டியேற்படும் என்ற எச்சரிக்கையை ஜனாதிபதி விடுத்திருக்கிறார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாங்கள் தொடர்ச்சியாக பொறுமை காத்துக் கொண்டே இருக்கின்றோம். தற்போது பொறுமையின் எல்லைக்கே வந்து விட்டோம். தொடர்ந்தும் நாம் புறக்கணிக்கப்படுவோமாக இருந்தால் அரசாங்கத்தை நடத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சிக்கு கூறி விட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிடும் எனவும் டிலான் பெரேரா சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் ஆற்றிய உரை சர்ச்சையை தோற்றுவித்துள்ளமை தொடர்பில் விபரிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக்கட்சியும் சுதந்திரக்கட்சியும் இணைந்து நாட்டின் தேசிய அரசாங்கத்தை அமைத்தன. இந்நிலையில் கூட்டரசாங்கம் என்பது இரண்டு தரப்பினதும் புரிந்துணர்வுடன் முன்னெடுக்கப்படவேண்டிய விடயமாகும். அதாவது இந்த அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் சம உரிமை இருக்கவேண்டும். இல்லாவிடின் அதில் அர்த்தமில்லை.

ஆனால் தற்போதைய நிலைமையில் தேசிய அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக்கட்சி ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

குறிப்பாக இந்த விடயத்தை நாங்கள் பல தடவை சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

ஆனால் எதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அதனால்தான் தற்போது ஜனாதிபதி இவ்வாறான நடவடிக்கையொன்றை எடுத்திருக்கிறார். அதாவது சுதந்திரக்கட்சிக்கு காட்டப்படும் மாற்றான்தாய் மனப்பான்மையுடனான அணுகுமுறை தொடர்பாக ஜனாதிபதி பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனால் அது தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சியானது கவனத்தில் கொள்ளவேயில்லை. காற்பந்து விளையாட்டுடன் தொடர்புபடுத்தி இதனை விளக்குவது என்றால் ஜனாதிபதி இரண்டு தடவை மஞ்சள் அட்டைகளை காண்பித்தார். ஆனால் அவை தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி கவனத்தில் கொள்ளவேயில்லை. இவ்வாறான பின்னணியிலேயே தற்போது சிவப்பு அட்டையை காட்டவேண்டி வரும் என்ற எச்சரிக்கையை ஜனாதிபதி விடுத்திருக்கின்றார்.

அதாவது சிவப்பு அட்டையை வெளிக்காட்டும் நிலைமை ஏற்பட்டால் அடுத்த கணம் சுதந்திரக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிடும். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியையே அரசாங்கத்தை செய்யுமாறு கூறிவிட்டு நாங்கள் வெளியேறிவிடுவோம். செய்வதை சரியாக செய்ய வேண்டும். இல்லாவிடின் வெளியேறி விட வேண்டும். இரண்டு மூன்று தடவை கூறிப்பார்க்கலாம். முடியாவிடின் விலகிச்செல்வதே மேலாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


அகில இலங்கை சமாதான நீதிவானாக மகுடம் சூடும்
உயர்திரு.ஆறுமுகம் இரவீந்திரன் அவர்களை
(தலைவர்: வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லம்
விரிவுரையாளர்: தேசிய கல்வியியற் கல்லூரி-யாழ்ப்பாணம்)
வாழ்த்துகின்றோம்



மாங்கலங்கள் பொங்கும்
நல்லறிவாளன் மனங்கள்
வெல்லும் பண்பறிவாளன்
மகோன்னத சேவையின்
மனநிறைவாளன்
மாண்புயர் பெருமை
பெற்றோன் வாழ்க!

அகில இலங்கை சமாதான
நீதிவானாய்
அணி சேர்த்த எங்கள்
விழியே ஒளிர்க
வாழ்வகத் தேருக்கு
பொற்கலசமெனத் துலங்கும்
வண்ணமுறு வல்லோனே
வாழ்க வாழ்கவே!

வாழ்த்திசைக்கும்
செல்வன்.துரைராஜா அருண்குமார்
வாழ்வக மாணவன்


# நான் பதவி விலகேன்

## பணிப்பாளர் டில்ருக்சி அறிவிப்பு



தான் பதவியை விட்டு விலகப் போவதில்லை என்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் டில்ருக்சி டயஸ் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக்கு சென்றுள்ள அவர் நாடு திரும்பியதும் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவித்தார்.

டில்ருக்சி தமது பதவியை துறக்கப்போகிறார் என்ற தகவல் வெளியாகியிருந்தது. பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் முப்படைத்தளபதிகள் ஆகியோர் இலஞ்ச ஊழல்கள் எதிர் ஆணைக்குழுவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் ஜனாதிபதி வெளியிட்ட கருத்தினை டில்ருக்சியின் பதவி துறப்பு தகவல் வெளியாகியிருந்தது. (இ-7)

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் முயற்சி செய்யவில்லை

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

மலையகம் இன்று உலகில் சுற்றுலாப்பயணிகளைக் கவருகின்ற காட்சிப் பொருளாதாரமாக மாறியுள்ளது. ஆனால் மலையக மக்கள் வாழ்வில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

மலையக தோட்டத்தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட தொழில் சங்கம் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் கண்டனக்கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது.

இதில் கலந்து கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கூறுகையில், இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு மலையக மக்கள் தலை மன்னாரில் இறக்கி விடப்படுகின்ற போது அவர்கள் கால்நடையாக மலையகம் வரை சென்று அங்கு மலைகளைக் குடைந்து பல அபிவிருத்திகளைச் செய்திருக்கின்றார்கள். இவ்வாறு வந்த எங்களுடைய உறவுகள் மலைகளை வெட்டி சமதரைகளாக்கி தோட்டங்களை அமைத்து பல அபிவிருத்திகளை செய்து இன்னும் அவர்கள் அப்படியே துன்பங்களையும் சுமைகளையும் சுமப்பவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள். ஆனால் மலையகம் இன்று உலகிலே காட்சிப்பொருளாக மாறியுள்ளது. அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகின்றார்கள்.அதிக நவீன புகையிரதங்கள் ஓடுகின்றன.

மனிதகுலம்இலங்கையில்அழிந்து போக வேண்டும் என்பதற்கான அநியாயங்கள் அனைத்தும் இந்த இலங்கையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மலையகத்தில் தான் வாழுகின்ற இந்த பெண்களது கற்பைக்கூட தடை செய்திருக்கின்றார்கள். பல துன்பங்களை கடந்து தான் தமது வாழ்க்கை பயணத்தில் பயணிக்கின்றார்கள். அந்த மக்களுக்கு சொந்தமாக கூட ஒரு நிலம் இல்லை. தற்போது பலரது முயற்சியால் ஏழு பேர்ச் காணிகள் சிலருக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் ஒரு வீடு கூட அமைக்கமுடியாது. மலையகம் சார்ந்து வாழுகின்ற பதினெட்டு இலட்சம் வரையான மக்களில் கிட்டத்தட்ட ஒன்பது இலட்சம் வரையான மக்கள் மலையகப் பகுதியிலேயே வாழ்கின்றனர்.

இவர்களில் ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு இருநூறு ஆண்டு கால வரலாற்றில் அரசாங்கம் இப்போது தான் முன் வந்திருக்கின்றது.

ஆனால் பிள்ளைகளை கல்வி கற்பிக்க முடியாமல் அவர்களின் வாழ்க்கை முறையைக் கொண்டு செல்லமுடியாமல் தவறுபவர்களாகவே இந்த மக்கள் காணப்படுகின்றனர்.

இவ்வாறு துன்பங்களை அனுபவிக்கின்ற மக்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்யவில்லை. என்றால் அம்மக்களின் வாழ்க்கை எப்படி அமையப்போகிறது. அவர்களது நியாயமான கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களது போராட்டம் நியாயமானது.அதற்கு நாங்கள் எங்களது பூரண ஆதரவை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# செட்டியார் கட்டையடம்பன் வீதியை பயணிப்பதற்கு ஏற்றவாறு செப்பனிடுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை



முருங்கன் செட்டியார் கட்டையடம்பன் வீதியின் பரிதாப நிலை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு கட்டையடம்பன் மக்கள் தெரியப்படுத்தியும் நீண்ட காலமாக எந்த ஒரு அதிகாரிகளோ, திணைக்களங்களோ, மக்கள் பிரதிநிதிகளோ வந்து பார்வை இடவோ அல்லது மக்களுடன் கலந்துரையாடலோ செய்யவில்லை என கட்டையடம்பன் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இன்னும் சில நாட்களில் மழை காலம் நெருங்கி வருவதால் இவ் வீதியில் பயணம் செய்வது சிரமமாக இருக்கும் என இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இக்கிராமத்தில் இருந்து இவ் வழியாக 65 மாணவர்கள் பாடசாலை செல்கின்றனர் எனவும் இவ்வாறு வீதிகள் காணப்படும் இடத்து பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மிகவும் மோசமான நிலைக்கு செம்மண்ணாக காணப்படும். போக்குவரத்துக்கள் அனைத்தும் மிகவும் கஷ்டமான நிலையாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மழை காலங்களில் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் பயன்படுத்துவது சிரமமாக இருக்கும் எனவும் அவசர தேவைகளுக்காக நோயாளியை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வது சிரமமாக காணப்படும் எனவும் சுட்டிக்காட்டி உள்ளனர்.

எனவே உரிய திணைக்கள அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை அமைச்சர், உறுப்பினர்கள் ஆகியோர் இதில் அதிக அக்கறை கொண்டு உரிய அதிகாரிகளை தொடர்புகொண்டு கட்டையடப்பன் மக்களின் வேண்டுகோள் நிறைவேற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-250)

# விசேட தேவையுடையோர் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டு விரைவில் கணனி மயம்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

கிளிநொச்சி மாவட்டத்தில் மருத்துவ மாதுக்களின் உதவியுடன் விசேட தேவையுடையோர் தொடர்பிலான தகவல்களை முழுமையாகத் திரட்டி கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களிலும் குறித்த தகவல் திரட்டும் நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடு தரிசிப்பு முறையிலான நடமாடும் மருத்துவ பராமரிப்பு சேவை வழங்கும் ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சியில் அண்மையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு பழைய மாவட்ட வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுல ராஜா, பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய ப.சத்தியலிங்கம் குறிப்பிடுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மருத்துவ மாதுக்களின் உதவியுடன் விசேட தேவையுடையோர் தொடர்பிலான தகவல்களை முழுமையாக திரட்டி கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் விரைவில் ஏனைய மாவட்டங்களிலும் குறித்த தகவல் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த சேவையானது கனடா நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தார். குறித்த சேவையில் தாதி, உளநல சுகாதார உத்தியோகத்தர், உதவியாளர், சாரதி அடங்கலாக நால்வர் அடங்கிய குழுவினர் சேவையில் ஈடுபடவுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் அழைக்கும்போது குறித்த நபரின் வீட்டுக்கு சென்று குறித்த சேவையை வழங்குவதே குறித்த திட்டத்தின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார். கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த திட்டமானது அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்திலும் தொடர்ந்து ஏனைய 5 மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு விசேட தேவைக்குட்பட்டோருக்கான விசேட வைத்தியசாலை ஒன்றினை விரைவில் மாங்குளம் பகுதியில் அமைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-15)

# நீதிமன்ற அபராதம்

(முல்லாவி)

கிளிநொச்சி பகுதியில் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சிறுவனை அச்சுவேலியில் உள்ள சான்று பெற்ற பாடசாலையில் வைத்து பராமரிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டமை மற்றும் கத்தி போன்ற கூரிய ஆயுதங்களை பாடசாலைக்கு கொண்டு சென்றமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சிறுவன் ஒருவன் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் மாவட்டச் சிறுவர் நன்னடத்தை அதிகாரியூடாக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து குறித்த சிறுவனை அச்சுவேலியில் உள்ள சான்று பெற்ற பாடசாலையில் வைத்து பராமரிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (2-15)

# மாகாண சபையினர் அரசியல் பேசக்கூடாது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

## கூட்டுறவு தினவிழாவில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாக, அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவை பற்றி மாகாண சபை உறுப்பினர்கள் பேசத் தேவையில்லை. இவர்கள் அபிவிருத்தியில் மட்டுமே கவனம் செலுத்தினால் போதுமானது என்று சிலரால் தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வருகிறது. இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று வடக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

முல்லை மாவட்டக் கூட்டுறவுச் சபையால் கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கூட்டுறவு தினவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியபோது,

மாகாணசபை ஒரு நிர்வாக அலகு மட்டும் அல்ல. மாகாண சபை முறைமை தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வாகவே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்டது. ஆனால், இது தமிழ் மக்களுக்கான தீர்வு அல்ல என்பதை விடுதலைப்புலிகள் உணர்ந்ததாலேயே அப்போது மாகாணசபை முறைமையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

வடக்கு மாகாணசபையை இப்போது நாம் நிர்வகிக்கின்ற போது தான் விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்ள மறுத்தமைக்கான காரணங்களை யதார்த்தபூர்வமாக உணர்ந்து கொள்ள முடிகிறது. எதனையும் சுயாதீனமாக நாம் செய்ய முடியாதவாறு மத்திய அரசின் கடிவாளம் போடப்பட்டுள்ளது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் எமக்கு வழங்கப்பட்ட பல அதிகாரங்கள் கூட, தோலிருக்கச் சுளை பிடுங்கும் கதையாக மத்திய அரசால் மீளவும் பிடுங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், எமது அரசியல் உரிமைப் போராட்டத்தின் ஒரு களமாக மாகாண சபையை நாம் பயன்படுத்துவது தவிர்க்க முடியாதது. இதன் அடிப்படையிலேயே, மாகாண சபையில் தமிழ் இன அழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதிய அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்துக்கான முன்மொழிவு முன்வைக்கப்பட்டது. எமது முதலமைச்சரும் அரசியல் ரீதியாக நாம் எதிர்கொண்டு வரும் நெருக்கடிகளை எவருக்கும் அடிபணியாது தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், து.ரவிகரன், கூட்டுறவு உதவி ஆணையாளர் உ.சுபசிங்க, முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் சி.ஏ.மோகனறாஸ் ஆகியோரும் அதிக எண்ணிக்கையான கூட்டுறவாளர்களும் கலந்து கொண்டார்கள். (2)

# மல்லாவி நகர் பகுதி வீதியின் வடிகாலமைப்பு தொடர்பாக விசேட கலந்துரையாடல்



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் வெள்ளாங்குளம் வீதியின் மல்லாவி நகர்ப்பகுதி வீதியின் வடிகாலமைப்பு தொடர்பான விசேட கலந்துரையாடல் கடந்த 14 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த மாதம் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் இடம் பெற்றபோது மல்லாவி நகர்ப்பகுதியில் வீதி அதிகளவு உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதனோடிணைந்த வடிகாலமைப்பு உரிய முறையில் அமைக்கப்படாமையால் கடைத்தொகுதிகளுக்குள் மழை வெள்ளம் உட்புகுவதாகவும் இதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டது.

இதன்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் பிரதேச செயலாளர் பாதிக்கப்பட்டவர்களுடன் கூட்டமொன்றை நிகழ்த்தி இதற்கான தீர்வை பெறுமாறு கூறப்பட்டது.

இதற்கமைவாகவே இக்கூட்டம் இடம்பெற்றது .இக்கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா, துணுக்காய் பிரதேச செயலாளர், துணுக்காய் பிரதேச சபை செயலாளர், வீதி அபிவிருத்திஅதிகார சபையின் பொறியியலாளர்கள், பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வீதி உயரமாக செய்யப்பட்டதால் இவ் வீதி வேலை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதே இவ் வீதிஉயர்த்தப்பட்டதன்விளைவுகள் தொடர்பாக தான் திட்டமிடல் பணிப்பாளராக இருந்த போது இவ்வாறான கூட்டமொன்றை நடத்தியதாக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

இதன்போது வீதியின் உயரம் காரணமாக அருகாக இன்னுமொரு வீதிஅமைப்பதாகவும் வடிகாலமைப்பு அழகுபடுத்தல் உள்ளிட்ட பல வேலைகள் செய்வதாக உறுதியளிக்கப்பட்டாலும் சில வேலைகள் இடம்பெற்று சில வேலைகள் இடம்பெறாததால் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பொறியியலாளர் தமக்கு வீதியின் வேலை நிறைவடைந்து குறுகிய காலமென்பதால் அந்த வீதியுடன்தொடர்புபட்ட வேலைக்காக மீண்டும் நிதியை பெற்றுக்கொள்ளமுடியாது.

தாம் இவ்வருடம் 300 மீற்றர் வடிகாலமைப்பு செய்யவுள்ளதாகவும் தமது நிலைப்பாட்டை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அனைவரும் கலந்துரையாடி இம்முறை மழைக்காலம் ஆரம்பித்துள்ளமையால் நீர் கடைத்தொகுதிக்குள் செல்லாதவாறு முக்கியமாக நீர் வடிந்தோடக்கூடியவாறான ஒரு ஏற்பாட்டை பிரதேச சபையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையுமாக செய்வதாகவும் படிப்படியாக நிரந்தர வடிகாலமைப்பை செய்துதர நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

வீதிஅழகுபடுத்தல்வேலைகள் செய்வதாக தெரிவிக்கப்பட்டிருந்தாலும் காலம் கடந்தமையால் அதன் முக்கிய தன்மையை உணர்ந்து அந்த வேலையைவிட முக்கியமான வேலையான வடிகாலமைப்பு நீர்வெளியேற்றல் ஆகியவற்றை செய்வதாக தீர்மானம் எட்டப்பட்டது.

இதனைவிட நகர்ப்பகுதியில் மணிக்கூட்டுகோபுரம் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டபோது வீதியின் நடுவில் அமைப்பதில் அந்த இடம் பொருத்தமற்றதால் சிக்கல் உள்ளதாகவும் வீதியின் ஒரு புறமாக அமைப்பதற்கு காலப்போக்கில் நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. (2-281)

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளவுயர்வு கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும் கிளிநொச்சி பொதுக்கூட்டத்தில் கருத்து




மலையக மக்களின் உரிமைக்காகக் கைகொடுப்போம் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் மாபெரும்பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேழமாலிகிதன் தலைமையில் இடம் பெற்ற இப்பொதுக்கூட்டத்தில், அருட்தந்தை செல்வம் மற்றும் அருட்தந்தை ஜோசுவா, பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், மாகாணசபை உறுப்பினர் ப.அரியரட்ணம், தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் சங்கையா, மேனாள் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.வை. குகராசா, கிளிநொச்சி மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர் ஜெயக்குமார், கிளிநொச்சி மாவட்ட தொழிற்சங்க பிரதிநிதிகள், ஆகியோர் கலந்து கொண்டு மலையக உறவுகளின் சம்பள உயர்வு கோரிக்கையினை அரசாங்கம் ஏற்று நிறைவேற்ற வேண்டும் என்று கருத்துரைகளை வழங்கினார்கள்.

இந்தப் பொதுக்கூட்டத்திற்கு கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள், வர்த்தகர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)




# மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட வணிகப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு

(மல்லாவி)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கு இடையே வலய மட்ட ரீதியில் நடத்தப்பட்ட வணிகப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களை முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் அறிவித்துள்ளார்.இதற்கமைய,

**பேச்சு போட்டி**

**தரம் - 10**

ந.மகிழினி (மு/உடையார் கட்டு மகா வித்தி.), செ.கிரிசாந்தினி (மு/ புதுக்குடியி ருப்பு மத்திய கல்லூரி), செ.நிருசனா (மு/புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி).

**தரம் - 11**

யோ.புவசுனா(மு/ வித்தியானந்தா கல்லூரி), ர.டெசாந்தினி (மு/முல்லைத்தீவு மகா வித்தி), ப.பகிர்தன்(மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**தரம் - 12,13**

ர.கஜன் (மு/முல்லைத்தீவு மகா வித்தி.),து.சுலக்சன்(மு/ முல்லைத்தீவு மகா வித்தி.), ர.தர்சனா (மு/ வித்தியானந்தா கல்லூரி).

**கட்டுரை, போட்டி**

**தரம் - 10**

தி.சுகன்யா (மு/கொக்குத் தொடுவாய் அ.த.க. பாடசாலை), ஞா.சங்கீர்த்தனா (மு/ வற்றாப்பளை மகா வித்தி.), நா. நவசுகிர்தா (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**தரம் - 11**

எஸ்.சதுர்சனா (மு/ கலைமகள் வித்தி.), கெ.தக்சனா (மு/புதுகுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), அ.அபிநயா (மு/ விசுவமடு மகா வித்தி).

**தரம் 12, 13**

த.துவாரகா (மு/வித்தியானந்தா கல்லூரி), சி.சுவீர்த்தனா (மு/வித்தியானந்தா கல்லூரி), வி.மயூரி (மு/வித்தியானந்தா கல்லூரி.

**குறுவினா போட்டி**

**தரம் - 10**

க.பிரணகா (மு/ வித்தியானந்தா கல்லூரி), க.தரணிகா( மு/வள்ளிபுனம் க.உ.வித்தி.), கி.விதுர்சிகா (மு/விசுவமடு மகா வித்தி).

**தரம் - 11**

தசுருகா (மு/வித்தியானந்தா கல்லூரி), த.லக்சன் (மு/விசுவமடு மகா வித்தி.), அ.ஜெனிற்றா (மு/செம்மலை வித்தி.).

**தரம் -12, 13**

பி.அனந் ஜெனுசியா (மு/முல்லைத்தீவு மகா விந்தி.), சு.சஞ்சீவ கிருஷ்ணா ( மு/ விசுவமடு மகா வித்தி), ல.கஜனி (மு/ வித்தியானந்தா கல்லூரி). (2-15)

# கொடிய நோய்த் தாக்கத்திற்குள்ளாகியுள்ள 126 பேருக்கு தொடர் மருத்துவ சிகிச்சைகளுக்கு 2 இலட்சத்து 11 ஆயிரம் ரூபா மாதாந்தம் பகிர்ந்தளிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள கரைதுறைப் பற்று பிரதேச செயலக பிரதேச செயலக பிரிவில் இடப்பெயர்வின் பின்னரான மீள் குடியேற்றத்தின் போது மீள் குடியேறியுள்ள மக்களின் கொடிய நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள 126 பேருக்கு தொடர் மருத்துவ சிகிச்சைகளுக்கு உதவியாக மத்திய அரசின் சமூக சேவைகள் அமைச்சின் ஊடாகவும் மற்றும் வடக்கு மாகாண சபையின் சமூக சேவைகள் அமைச்சின் ஊடாகவும் மற்றும் வடக்கு மாகாண சபையின் சமூக சேவைத் திணைக்களத்தின் ஊடாகவும் மாதாந்தம் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 800 ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுவருவதாககரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மத்திய அரசின் சமூக சேவைகள்அமைச்சின் ஊடாக சிறுநீரகங்கள் பாதிப்படைந்த நிலையில் மருத்துவ சிகிச்சைகள் பெற்று வருகின்ற 33 பேருக்கு மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 99 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

இதயநோய்த் தாக்கத்திற்குள்ளான 33 பேருக்கு சமூக சேவைகள் திணைக் களத்தின் ஊடாக தலா மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் 33 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் கீழுள்ள சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக இருப்பிற்கு கீழ் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டுள்ள 14 பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் மொத்தம் 21 ஆயிரம் ரூபாவும் முற்றாக உடல் செயலிழந்துள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 5 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

புற்றுநோய்த் தாக்கத்திற்கு உள்ளான நிலையில் தலா ஆயிரம் ரூபா வீதம் 26 பேருக்கு 26 ஆயிரம் ரூபாவும் தலா ஆயிரத்து 200 ரூபா படி 11 பேருக்கு 13 ஆயிரத்து 200 ரூபாவும் தலா ஆயிரத்து 500 ரூபா படி ஒரு நபருக்குமாக மொத்தம் 40 ஆயிரத்து 700ரூபாவும்வழங்கப்படுகின்றது.

இதேபோல் குருதிஉறையா நோய்க்கு ஒரு நபருக்கு ஆயிரம் ரூபாவும் காசநோய்க்கு ஒரு நபருக்கு ஆயிரம் ரூபாவும் தொழுநோய்க்கு ஒரு நபருக்கு ஆயிரத்து 200 ரூபாவுமாக மொத்தம் 3 ஆயிரத்து 100 ரூபா மாதாந்தம் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# கண்டாவளை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுகளில் 20,21 ஆம் திகதிகளில் நடமாடும் சேவைகள்

( மல்லாவி )

மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் அண்மையில் கிளிநொச்சியில் நடமாடும் சேவை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்தநடமாடும் சேவை கிளிநொச்சியில் அமைந்துள்ள மகளிர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்குபிரதேச செயலர் பிரிவுகளிலும் இடம்பெறவுள்ள குறித்த நடமாடும் சேவையில் அண்மையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்களிற்கு சேவைகள் வழங்கப்பட்டன.



அத்துடன் எதிர்வரும் 20,21ஆம் திகதிகளில் கண்டாவளை மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுகளிலும் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நடமாடும்சேவையை ஆரம்பித்து வைப்பதற்காக அமைச்சின் செயலாளர் சந்திராணி பண்டார, பிரதி செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நடைபெற்று முடிந்த நடமாடும் சேவையின் போது பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, ஓய்வூதிய சேவைகள் உள்ளிட்ட பல சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)




வேலணை பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவினால் 2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து தீவகம் வேலணை பிரதேச சபைக்கான இரண்டு கிராமிய கடற்றொழில் அமைப்புகளுக்கான வலைகளும் புங்குடுதீவில் மூன்று முன்பள்ளிகளுக்கான தளபாடங்களும் வழங்கப்பட்டன.





கிறீன் கிறாஸ் ஹோட்டலில் கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நவராத்திரி விழா நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டார்.





யா/குடமியன் அ.த.க. பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வுகள் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளர் எஸ்.கோணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.




இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு நிலைமாற்று நீதி தொடர்பான செயலமர்வு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்.சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. (படங்கள்:பொ.சோபிகா)





சண்டிலிப்பாய் இந்து பொதுச் சேவைக்கழகத்தின் நவராத்திரி விழா பாத்தி சனசமூக நிலையத்தில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது.

வடமராட்சி தெற்கு - மேற்கு நெல்லியடி உப அலுவலகத்தால் உள்ளூராட்சி மாதத்தினை முன்னிட்டு அண்மையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் ஆதனவரி அறவீடு, துவிச்சக்கரவண்டிகளுக்கு உரிமத்தகடு விநியோகம், வளர்ப்பு நாய்களுக்கான பட்டி, உரிமத்தகடு வழங்கல் போன்ற சேவைகள் நடைபெற்றன. இதில் பிரதேச சபை செயலாளர், பொறுப்பதிகாரி, உப அலுவலக உத்தியோகத்தர்கள், வருமானப் பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்: கரணவாய் செய்தியாளர்)




# சிவஸ்ரீ பூர்ண தியாகராஜக் குருக்களின் நினைவுக் குறிப்புக்கள்



திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமான சிவஸ்ரீ பூர்ணானந்தேஸ்வரக் குருக்களின் மூன்றாவது மகனும் சிவாச்சார்ய குலத்தின் உதய சூரியனாகவும், சமஸ்கிருதக் கல்வியின் வியாகரணப் பிரிவிற்கென சிறப்பானவருமாகப் பிறந்தவர் வியாகரண சிரோமணி பூர்ண தியாகராஜக் குருக்கள் ஆவார். தகப்பனார் பூர்ணானந்தக் குருக்களுக்கும் தாயார் யோகாம்பிகைக்கும் 26.06.1931 இல் திருகோணமலை வில்லூன்றியில் பிறந்து மட்டக்களப்புக் கல்லடி உப்போடையில் வாழ்ந்து சிறந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டு குருகுல முதல்வராகவும் ஆசிரியராகவும் பல நூல்களுக்குச் சொந்தக்காரராகவும் பேச்சாளராகவும் சமய, சமூக எழுச்சியாளராகவும் பன்முகப்பட்ட ஆளுமை கொண்டவராகவும் 85 வருடங்கள் வாழ்ந்து சுவாமி விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகளை முன்னெடுத்து கிழக்கில் சமஸ்கிருதக் கல்வியின் விடிவெள்ளியாக விளங்கியவர் பூர்ண தியாகராஜக் குருக்கள் ஆவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியைத் திருகோணமலை இந்துக் கல்லூரியில் கற்று 1943 இல் தமையனார் சண்முகரத்ன சர்மாவுடன் சிதம்பரம் சென்று M.S. வித்தியாலயத்தில் சேர்ந்து சமஸ்கிருத வியாகரணம் (இலக்கணம்), சாஹித்தியம் (இலக்கியம்), தர்க்கம் (லொஜிக்) வேதாந்தம், மீமாம்சை, தமிழ் முதலிய பாடங்களில் ஆறு வருடம் பயிற்சி பெற்றார்.

Madras Government நடத்திய பல்கலைக்கழக பிரவேசப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் சமஸ்கிருத மொழியில் திறமைச் சித்தி பெற்றார். பின்பு நான்கு வருடங்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று 'வியாகரண சிரோமணி' எனும் சிறப்புப் பட்டம் பெற்றார். அங்கு பயிலும் போதே விடுமுறை நாட்களில் வேதாத்யயனமும் ஆகம பாடங்களும் உரியவர்களிடம் பயின்றிருந்தார். பின்பு பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்களின் வழிகாட்டலில் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக B.A. Hons - (2nd Class Upper Division). இரண்டாம் வகுப்பு உயர் தரச் சித்தி பெற்றிருந்தார்.

இவர் ஆரம்பத்தில் திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆறு மாதங்கள் சமஸ்கிருத ஆசிரியராகக் கடமையாற்றி பின் கல்லடி, உப்போடை சிவானந்த வித்தியாலயத்தில் (Super A grade School) மேல்வகுப்பு மாணவர்களுக்கு பதின்மூன்று வருடம் சமஸ்கிருதமும் பின் இந்து நாகரிகமும் கற்பித்து அனைத்து மாணவர்களையும் அதிவிசேட, விசேட/திறமை (ABC) சித்தி பெறச் செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்த பெருமையையும் பெற்றிருந்தார். 100% மாணவர்கள் தொடர்ந்து சித்தி பெற வைத்து பாடசாலைக்குப் பெரும் பெயரையும் புகழையும் தேடிக் கொடுத்திருந்தார். இவ்வேளை எண்ணற்ற ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக பதுமுகத்தேர்வு (GAQ) பட்டதாரி மாணவர்களுக்கான B.A, M.A., பரீட்சைகளுக்கு லண்டன் B.A, M.A பரீட்சை மாணவர்களுக்கும் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாக வீட்டில் கற்பித்து சிறந்த கல்வியியலாளராக ஆக்கியிருந்தார்.

**கிழக்கிலங்கையில் சமஸ்கிருத கல்வியின் விடிவெள்ளி வியாகரண சிரோமணி சிவஸ்ரீ பூர்ண தியாகராஜக் குருக்களின் மறைவைக் குறித்து இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

வியாகரண சிரோமணி தியாகராஜக் குருக்களுக்கு 1975ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிற்றாண்டி முருகன் சந்நிதியில் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்களால் குருப்பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்டு குருக்களாக மிளிருவதற்கு தீட்சை கொடுத்திருந்தார்.

ஆசிரியப் பணியையே முதன்மையாகக் கொண்டிருந்த குருக்கள் சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்ந்திருக்கின்றார். ஒரே கல்லூரியிலே இடம் மாற்றம் இல்லாமல் தொடர்ந்து சுமார் 35 வருடங்களாக (1954 - 1988) ஆசிரியப் பணி புரிந்தமை சமூக சேவை செய்வதற்கு பெரும் உந்து சக்தியாக இருந்தது. மட்டக்களப்பில் உள்ள எண்ணற்ற பிராமண சிறுவர்களுக்கு சமஸ்கிருத தேவநாகரி, கிரந்த எழுத்துப் பயிற்சிகளை மேற்கொண்டு பத்ததி படிக்கின்ற பாரம்பரிய முறைகளையும் உருவாக்கியிருந்தார். இதனால் அவரிடம் மாணவ சமூகம் அதிகமாகக் காணப்பட்டது. அத்துடன் 1962 - 1964 வரை மட்டக்களப்பு பிராமண சமூக சங்கத்தலைமைப் பதவியை வகித்து வந்த தந்தையார் சிவஸ்ரீ இ.கு. பூர்ணானந்தேஸ்வரக் குருக்கள் பல விளக்கங்களுடன் எழுதிய விக்னேஸ்வர பூஜா விதி, அக்னிகாரியம் ஆகிய புத்தகங்களைத் தியாகராஜக் குருக்கள் தொகுத்து வெளியிட்டிருந்தார். இவ்விரு புத்தகங்களும் இன்று வரையும் சிவாச்சார்யர்களால் அதிகம் விரும்பிப் படிக்கப்படுவதோடு பிரயோகங்களுக்குப் பயன்பட்டு வருகின்றது.

சிதம்பரத்தில் M.S. வித்தியாலயத்தில் சேர்ந்து 6 வருடம் வரை சமஸ்கிருத சுலோகங்கள், வசனங்களுக்குத் தமிழில் உரை, பொழிப்புரை, க்கு சமஸ்கிருதத்துக்கு வியாக்யானம், அர்த்தம், பாவம் கூறி படிக்கும் முறை, பேச்சு, உரையாடல், பாடல்கள் யாவும் சமஸ்கிருதத்திலேயே ஸ்லோகங்கள், வேதப் பகுதிகள் எதுவாயினும் இலக்கண அட்சர சுத்தமாக அகராதி Dictionary) இன்றியே கருத்துக் கூறுமளவுக்கு வடமொழி பேச்சுத் திறமை, கருத்துக் கூறும் திறமை பெற்றிருந்தார்.

1. நளோபாக்யானமும் ஹிதோபதேசமும் -1961 (சமஸ்கிருத மூலமும், பதவுரை, இலக்கணக் குறிப்புகளும், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பும்)

2. சாவித்திரி உபாக்கியானமும் ருதுசம்ஹாரமும். -1964(சமஸ்கிருத மூலம், பதவுரை, இலக்கணக் குறிப்புகளும் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும்)

4.பஞ்சதந்திர லப்தப்ர ணாசம் -1964 (சமஸ்கிருத தமிழ் எழுத்தின் மூலமும் பதவுரை இலக்கணக் குறிப்புக்களும் தமிழ் மொழி பெயர்ப்பும்.)

5.கணேச பஞ்சரத்னம் - 1961 (கிரந்த எழுத்தில் மூலமும் தமிழ் உரையும்)

5.சிவதாண்டவ ஸ்தோத்திரம்.-1962 (கிரந்த எழுத்தின் மூலமும், பதவுரையும் மொழிபெயர்ப்பும்)

6.லஷ்மிஸ்துதி மாலா - 1973 (சமஸ்கிருத - தமிழ் எழுத்துக்களின் மூலமும் தமிழ் பொழிப்புரையும்)

7.ஷண்முக ஷட்கம் -1981 (தமிழின் மூலமும், பொழிப்புரையும் தமிழாக்கமும்)

8.விக்னேஸ்வர பூஜா விதி -1978 (கிரந்த மூலம் தமிழ் விளக்கக் குறிப்பும்)

9.கணேஷ பஞ்சரத்னமும் -1974 கணேசாஷ்டகமும் (தமிழின் மூலமும் பதவுரை - பொழிப்புரையும்.)

10.நீதி சதகம் -1966 (சமஸ்கிருத - தமிழ் எழுத்தின் மூலமும், பதவுரை - இலக்கணக் குறிப்புக்களும்)

இயற்றி உரை எழுதிய நூல்கள்

1.கோண கிரீச அஷ்டகம் -1981

2.திருத்தணி ஷண்முக ஷட்கம் -2003

3.காஞ்சிகைலாசநாத அஷ்டகம் -2003

4.பறாளாய் சுப்பிரமண்ய அஷ்டகம் -2004

5.Toranto வரசித்தி விநாயகர் அஷ்டகம் -2003

6.ஸ்ரீபுவனேஸ்வரி அஷ்டகம் - சுதுமலை (2005)

இலங்கை வானொலி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கனடாவில் I.T.R. வானொலி சேவையில் என்பவற்றை சமய வளர்ச்சிக்காக சமய பேச்சு நற்சிந்தனைகளை ஆற்றினார்.

1954- 1990 வரை கொழும்பு கப்பித்தாவத்தை பாலசெல்வ விநாயகர் கோவிலின் எல்லா விழாக்களிலும் முதலிடம் பெற்றார். அங்கு மஹாலட்சுமி பஞ்சகுண்ட பிரதிஷ்டா குருவாக விளங்கினார். நயினை நாகபூஷணி அம்மன், புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவில், குறிகட்டுவான் கோவில், ஊரெழு அம்மன் கோவில், நல்லூர் சிவன் கோவில், திருமலை சிவன் கோவில், திருமலை முத்துக்குமாரசாமி கோவில், தச்சுவெளி பிள்ளையார் கோவில், திருமலை கிருஷ்ணன் கோவில் முதலிய பல கோவில்களில் பிரதான குருவாகவும் உதவிக் குருவாகவும் இருந்து கும்பாபிஷேகம், மஹோற்சவம் முதலியவற்றை நடத்தி வைத்துள்ளார்.

பல ஆலயங்களில் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்தார். திருமலை கோணேசர் மூன்றாம் கும்பாபிஷேகத்தில் பூமியில் இருந்து எடுத்த கோணேசர் உற்சவர் பஞ்சகுண்ட யாகம், குச்சவெளிப் பிள்ளையார் கோவில், மட்டக்களப்பு, செங்கலடி சித்தி விநாயகர் கோவில் (இருமுறை) சுப்ரமணியர் பிரதிஷ்டை, கல்முனை வைத்தியசாலை பிள்ளையார் கோவில், மட்டக்களப்பு வைத்தியசாலை பிள்ளையார், காரைதீவு கண்ணகை அம்மன் கோவில், பாலையடி முருகன் கோவில் அக்கரைப்பற்று பாலையடி வேம்பு முருகன் கோவில், அக்கரைப்பற்று பாசுபதேஸ்வரர் கோவில், மட்டக்களப்பு மாரியம்மன் கோவில், மட்டக்களப்பு நகர சித்தி விநாயகர் கோவில் ஆகிய இடங்களில் பிரதிஷ்டா பிரதம குருவாகக் கடமையாற்றியிருந்தார்.

லண்டன் உயர் வாசல் குன்று முருகன் கோவில், ஜேர்மன் குமஸ்பாக் முருகன் கோவில், ஜேர்மன் ஹனோவர் முத்துமாரி கோவில், டென்மார்க் சித்தி விநாயகர் கோவில், சுவிஸ் கிறங்கன் துர்க்கையம்மன் கோவில் கனடா மொன்றியல் முருகன் கோவில் போன்ற பல கோவில்களிலும் பிரதான குருவாக இருந்து குருத்துவப் பணியை திறம்படுத்தியுள்ளார்.

வேறு கௌரவ பட்டங்கள் சிறப்பாகப் பெற்றமை

வித்வ சிரோமணி, சிவாசார்ய மணி, சிவாசார்ய கலாநிதி, வித்யாசாகர வேதாகம சைவசித்தாந்த விசாரத, பாடல் வல்லான், சிவாசார்ய சக்கரவர்த்தி, சிவாகமச் செம்மல் முதலிய கௌரவப் பட்டங்களைப் பெற்று எமது சிவாச்சார்யார்களுக்கு முன்னோடியாகவும் சிறப்பானவராகவும் திகழ்ந்தார்.

கலாநிதி.மகேஸ்வரக்குருக்கள்.
பாலகைலாசநாதசர்மா,
சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

## களனி கங்கைக்கு சென்றவர் பலி

கிரிகத்தேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களனி கங்கையில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க பி.மகிந்த என அடையாளம் காணப்பட்டுள்ளார். (இ-7)

## நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பலாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் பலாலி வடபத்திரகாளி அம்மன் கோவில் அருகில் உள்ள மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் அபிவிருத்திச் சங்க தலைவராக த.தனபாலசிங்கம், உபதலைவராக சி.சுப்பிரமணியம், செயலாளராக த.நவரத்தினம், உபசெயலாளராக சி.குணசேகரம், பொருளாளராக பொ.ஆனந்தகோபாலன், கணக்காளராக ஜெ.செல்லக் கந்தராணி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் 8 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (இ-9)

## நினைவு நாள் பேருரை

மகாஜனக் கல்லூரியின் நவ மகாஜன சிற்பி தெ.து. ஜயரத்தினம் நினைவுநாள் பேருரை எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை கோட்டக் கல்வி அலுவலக அலுவலர் மா.ஆனந்தகுமார், வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ம.பா.மகாலிங்கம், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## ஊழியரைத் தாக்கியவர் கைது

(கரணவாய்)

நெல்லியடி நகரின் பாதுகாப்பு ஊழியர் ஒருவரை தாக்கிய இளைஞர் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆ.பி.ஏ.பிரியந்த தெரிவித்தார்.

கடந்த 14 ஆம் திகதி நள்ளிரவு மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பாதுகாப்பு ஊழியர் மீது தாக்குதல் நடத்தியதாக வர்த்தக சங்கத்தால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன் பிரகாரம் தாக்குதல் மேற்கொண்ட வதிரிப் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரை நேற்று முன்தினம் காலை கைது செய்ததுடன் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-50)



ஜே/215 அளவெட்டி வடக்கு கிராமியச் செயலகத்தின் ஓராண்டு நிறைவு விழா கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மங்கல விளக்கேற்றுவதையும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# தீவிரவாதத்தை வேரறுக்க இந்தியா - சீனா ஒப்புதல்



தீவிரவாதத்தை வேரறுக்க இந்தியாவும், சீனாவும் ஒப்புக்கொண்டுள்ளன. பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் நேற்று முன்தினம் கோவா வந்தடைந்தார். மாநாடு நடைபெறும் இடத்தில் இருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் தாமோலிம் விமான நிலையத்துக்கு அருகே உள்ள ஹன்சா விமானத் தளத்தில் வந்திறங்கிய சீன ஜனாதிபதியை வெளியுறவுத்துறை அமைச்சர் வி.கே. சிங் வரவேற்றார். பின்னர் ஜி ஜின்பிங், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினார்.

கூட்டத்துக்கு பின்னர் சீனாவுக்கான இந்திய தூதர் விஜய் கோகலே செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

தீவிரவாதத்தால் இப்பிராந்தியம் பாதிக்கப்பட்டுள்ளதை இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். தீவிரவாதத்தை தடுக்க இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது என்றும் இந்த சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது எனத் தெரிவித்தார். (இ-7)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் 35 பொதுமக்கள் உயிரிழப்பு!





(பக்தாத்)

ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய அடுத்தடுத்த குண்டு வெடிப்பில் பெண்கள் உட்பட 35 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

முன்னதாக பக்தாத் நகரத்தின் வடக்கே உள்ள பலாத் பகுதியில் இஸ்லாமிய புனித தலத்தை குறிவைத்து ஐ.எஸ் தீவிரவாத படையினர் துப்பாக்கியால் சுட்டும், குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து மற்ற இரண்டு தீவிரவாத தற்கொலை படையினர் அங்கு இருந்த சந்தைப் பகுதிக்குள் புகுந்து அவர்கள் உடலில் கட்டி வைத்து இருந்த குண்டுகளை வெடிக்க செய்துள்ளனர்.

இதில் 35 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 60இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-7)

# இந்தியாவுடன் நெருங்கிய உறவு ட்ரம்ப் பேச்சு



(நியூஜெர்சி)

அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டால், இந்தியாவுடன் நெருங்கிய உறவு தொடரப்படும் என குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

குடியரசு கட்சியை சேர்ந்த இந்து அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர்,

இந்தியா முக்கிய நட்பு நாடாக திகழ்கிறது. நான் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வானால், இந்தியாவுடனான அமெரிக்க உறவு சிறப்பானதாக இருக்கும். இரு நாடுகளுக்கும் மிகச்சிறந்த எதிர்காலம் உள்ளது. இந்திய பிரதமர் மோடியுடன் இணைந்து செயற்பட ஆர்வமாக உள்ளேன்.

பிரதமர் மோடி ஆற்றல் மிக்கவராக உள்ளார். நான் இந்துக்கள் மற்றும் இந்தியாவின் மிகச்சிறந்த ரசிகன். நான் ஜனாதிபதியாக தேர்வானால், வெள்ளை மாளிகை, இந்துக்கள் மற்றும் இந்தியாவுடன் நெருங்கிய உறவை கொண்டிருக்கும் எனத் தெரிவித்தார். (இ-7)

# மோடி - ஜின்பிங் பேச்சுவார்த்தை

## சீனப் பத்திரிகையாளர்கள் - இந்திய அதிகாரிகளிடையே கைகலப்பு



பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள சீன ஜனாதிபதி ஜின்பிங் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பாக செய்தி சேகரிக்க வந்த சீனப் பத்திரிகையாளர்களுக்கும் இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டை முன்னிட்டு கோவாவில் உள்ள பெனாலிம் கிராமத்துக்கு வந்துள்ள சீன ஜனாதிபதி ஜின்பிங், இந்திய பிரதமர் மோடியை இங்குள்ள தாஜ் எக்சாட்டிக்கா ஹோட்டலில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சீன ஜனாதிபதியுடன் கோவா வந்துள்ள அந்நாட்டின் பத்திரிகையாளர்கள் இந்த பேச்சுவார்த்தை தொடர்பாக செய்தி சேகரிக்க பெருந்திரளாக அந்த ஹோட்டலுக்கு வந்தனர். அவர்களை பேச்சுவார்த்தை நடைபெற்ற அறைக்குள் அனுமதிக்க இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

இதனால் அதிருப்தி அடைந்த சீனப் பத்திரிகையாளர்கள் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் வாக்குவாதத்திலும், பின்னர் கைகலப்பிலும் ஈடுபட்டனர். (இ-7)

# பாகிஸ்தானை தனிமைப்படுத்துவதற்கு பிரிக்ஸை பயன்படுத்த இந்தியா முயற்சி

சர்வதேச நாடுகளிடம் இருந்து பாகிஸ்தானை தனிமைப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இந்திய நகரங்களில் ஒன்றான கோவாவில் நடைபெற்று வருகின்ற பிரிக்ஸ் மாநாட்டை இந்தியா பயன்படுத்த முயற்சிக்கும் என்றும் பாகிஸ்தானின் தீவிரவாத ஆதரவு நடவடிக்கைகள் குறித்து உலக தலைவர்களிடம் பிரதமர் மோடி எடுத்துரைப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிக்ஸ் நாடுகளின் இரண்டு நாள் உச்சி மாநாடு கோவாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய உறுப்பு நாடுகளை சேர்ந்த தலைவர்கள் இந்தியா வந்தடைந்துள்ளனர். அந்தவகையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சீன ஜனாதிபதி ஜிங்பின், பிரேசில் ஜனாதிபதி மைக்கேல் டெர்மர் ஆகியோருக்கு சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

கோவா மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், நடைபெறுகின்ற குறித்த மாநாட்டில் பாகிஸ்தானின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து உலக தலைவர்களிடம் பிரதமர் மோடி எடுத்துரைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகளின் வளர்ச்சி, தீவிரவாத தடுப்பு உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# இரு விஞ்ஞானிகளுடன் இன்று விண்வெளிக்கு புறப்படும் சீனாவின் ஷெங்ஸோ 11 விண்கலம்





(பீஜிங்)

இராணுவ பலத்துக்கு அடுத்தபடியாக விண்வெளியிலும் தனது வல்லமையை நிலைநாட்ட உறுதி பூண்டுள்ள சீனா இரண்டு விஞ்ஞானிகளுடன் "ஷெங்ஸோ 11" என்ற விண்கலத்தை இன்று காலை விண்ணில் செலுத்துகிறது.

விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை நிறுவிட திட்டமிட்டுள்ள சீனா கடந்த 2013 ஆம் ஆண்டு 'டியாங்காங் 1' என்ற ஆய்வு விண்கலத்தை விண்ணில் செலுத்தியது.

இந்த விண்கலத்தில் சென்ற மூன்று சீன விஞ்ஞானிகள் 15 நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்து பல்வேறு கட்ட ஆராய்ச்சிகளை நடத்தி முடித்து, வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினர்.

இந்நிலையில், ஜிகுவான் மாகாணத்தில் உள்ள கோபி பாலைவனப் பகுதியில் இருந்து 'டியாங்காங் 2' என்ற விண்கலத்தை கடந்த மாதம் 15 ஆம் திகதி சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

இதனையடுத்து, ஷெங்ஸோ 11' என்ற விண்கலத்தில் இரண்டு விஞ்ஞானிகளை விண்வெளிக்கு அனுப்பி "டியாங்காங் 2" விண்கலத்துடன் 'ஷெங்ஸோ 11' இணைத்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான அடுத்தகட்ட திட்டத்தை சீனா மேற்கொண்டுள்ளது.

'ஷெங்ஸோ 11' விண்கலத்தில் விண்வெளிக்கு செல்லும் இரண்டு விஞ்ஞானிகளும் சுமார் ஒருமாத காலம் விண்வெளியில் தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று காலை 7.30 மணியளவில் ஷெங்ஸோ 11' விண்கலத்தை விண்வெளியில் செலுத்தும் ஆயத்தப்பணிகள் நடைபெற்று வருவதாகவும், ஆய்வுக்கு செல்லும் விஞ்ஞானிகள் இதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு தயார் நிலையில் இருப்பதாக சீன விண்வெளி ஆய்வு மையத்தின் திட்ட அதிகாரி பிங் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வுகளை அடுத்து, எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுக்குள் விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராணுவத்தின் தாக்குதலில் தீவிரவாதிகள் 100 பேர் பலி!



## 40 பேர் படுகாயம்



(கெய்ரோ)

எகிப்தில் சினாய் தீபகற்ப பகுதியில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் ஆதிக்கம் அதிக அளவில் உள்ளது. எனவே, அவர்களை ஒழிக்க இராணுவம் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் வடக்கு சினாய் தீபகற்ப பகுதியில் ரபா, ஷேக் ஷூவையத் மற்றும் அல்-அரீஷ் ஆகிய தீவிரவாதிகள் முகாம்கள் மீது இராணுவ போர் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. அதில் 100 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் பலியாகினர்.

40 பேர் காயம் அடைந்தனர். சினாய் துறைமுகம் பகுதியில் இருந்த தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்து குடோன்களும் குண்டு வீச்சில் தரைமட்டமாக்கப்பட்டன. இந்தத் தகவலை எகிப்து இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு சோதனைச்சாவடியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் புகுந்து அதிரடி தாக்குதல் நடத்தினார்கள். அதில் 12 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். அதற்கு பழிவாங்க இத்தாக்குதல் நடத்தப்பட்டது. (இ-7)

## சிரியா போருக்கு தூதரக அளவில் தீர்வைக் காண பேச்சுவார்த்தை

### அமெரிக்கா தலைமையில் நேற்று ஆரம்பம்



சிரியாவில் 5 வருடங்களுக்கும் மேலாக நடந்து வரும் போருக்கு தூதரக அளவிலான தீர்வு காண்பதற்காக அமெரிக்கா தலைமையில் ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுடன் சுவிட்சர்லாந்தின் லாசேன் நகரில் நேற்று பேச்சுவார்த்தை தொடங்கியது.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான ஆட்சிக்கு எதிராக வன்முறையாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கலவரத்தில் ஈடுபடுவோரை கட்டுப்படுத்த இராணுவத்தினை அரசு பயன்படுத்தி வருகிறது. இதில் இலட்சக்கணக்கான பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

சிரியா அரசுடன் வேறு சில நாடுகளும் இணைந்து போரில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில் சிரியாவின் போரினை முடிவுக்கு கொண்டு வர தூதரக அளவிலான தீர்வு காண்பதற்காக நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி மற்றும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் ஜோர்தான், துருக்கி, கட்டார், எகிப்து, ஈரான், ஈராக் மற்றும் சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களும் கலந்து கொண்டுள்ளனர். (இ-7)

## அனைத்து பயங்கரவாத அமைப்புக்களையும் பாகிஸ்தான் ஒடுக்க வேண்டும் - அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவுத் துறை துணை செய்தி தொடர்பாளர் மார்க் டோனர், அனைத்து பயங்கரவாத அமைப்புகளையும் பாகிஸ் தான் ஒடுக்க வேண்டும் என்று கண்டித்துள்ளார்.



அமெரிக்காவின் உலகளாவிய பயங்கரவாத தடுப்பு நடவடிக்கையில் பாகிஸ்தானும் இடம்பெற்றிருக்கிறது. பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நிதி உதவியும் அளித்து வருகிறது.

ஆனால் பாகிஸ்தானின் இராணுவ உளவு அமைப்பு ஐ.எஸ்.ஐ.பயங்கரவாத அமைப்புகளுக்கு மறைமுக ஆதரவு அளித்து வருகிறது.

பயங்கரவாத ஒழிப்பில் அனைத்து அமைப்புகள் மீதும் இராணுவம் நடவடிக்கை எடுப்பதில்லை. பாரபட்சம் காட்டுகிறது என்ற குற்றச்சாட்டு உள்ளது.

இந்த நிலையில் அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செய்தி தொடர்பாளர் மார்க் டோனர், வோஷிங்டனில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், "பாகிஸ்தான் மண்ணில் செயற்பட்டு வருகிற அனைத்து பயங்கரவாத அமைப்புகளையும் சட்டவிரோதமானவை என ஆக்கி, அவற்றை ஒடுக்க வேண்டும் என்று அந்த நாட்டு அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் என கூறினார்.

"பாகிஸ்தான் பயங்கரவாதிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த பயங்கரவாதிகளால் ஏற்படுகிற அச்சுறுத்தலுக்கு முடிவு கட்டுவதில் நாங்கள் உதவ விரும்புகிறோம்.

அதேநேரத்தில் பாகிஸ்தானை புகலிடமாக கருதுகிற பயங்கரவாதிகளை பின் தொடர்ந்து சென்று, பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு என அவர் கண்டிப்புடன் தெரிவித்தார். (இ-7)

## மோடி - புடின் விசேட சந்திப்பு; 16 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முன்னிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை 16 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

கோவா மாநிலம், பாணாவலி கடற்கரை நகரில் நடைபெறும் 'பிரிக்ஸ்' அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பாணாவலிக்கு வருகை தந்தார்.

இதனையடுத்து பிரதமர் நரேந்திர மோடி மற்றும் புடினுக்குமிடையிலான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதன் போது உணவு, பாதுகாப்பு, ரயில்வே உள்ளிட்ட துறைகள் தொடர்பாக 16 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இதில் ரூ.39,000 கோடி மதிப்பிலான அதிநவீன ஏவுகணை வாங்கும் ஒப்பந்தமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், இந்தியா - ரஷ்யா இணைந்து 200 காமோவ் ஹெலிகொப்டர்களை தயாரிக்கும் ஒப்பந்தமும் கையெழுத்தானது.

இச்சந்திப்பைத் தொடர்ந்து, பிரதமர் மோடி செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

'பயங்கரவாத விவகாரத்தில் சகிப்புத் தன்மை கூடாது. பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டையே ரஷ்யாவும் கொண்டுள்ளது.



நமது பிராந்தியத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு எதிரான நமது நடவடிக்கையை ஆதரிப்பதற்கும், நமது நிலையை உணர்ந்துள்ளதற்கும் ரஷ்யாவுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன்.

பயங்கரவாதிகள் மற்றும் அவர்களை ஆதரிப்போரிடம் சகிப்புத்தன்மை காட்டக் கூடாது' என்பதில் இருநாடுகளும் உறுதியாக உள்ளன.

ரஷ்யாவின் உதவியுடன் இந்தியாவில் மேலும் 8 அணு உலைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அணுசக்தித் துறையில் இரு நாடுகளிடையே நிலவும் விரிவான ஒத்துழைப்பு, பரஸ்பரம் 2 நாடுகளுக்கும் நல்ல பலன்களையே தரும்.

ரஷ்யாவில் எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையில் கடந்த 4 மாதங்களில் மட்டும் இந்திய நிறுவனங்கள், ரூ. 36 ஆயிரம் கோடி முதலீடு செய்துள்ளன. ரஷ்ய ஜனாதிபதி புடினின் ஆதரவுடன், இத்துறையில் இருநாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்த இந்தியா தயாராகவும், ஆர்வமாகவும் இருக்கிறது.

ஆப்கானிஸ்தான் நிலவரம், மேற்காசியப் பிரச்சினை ஆகியவற்றில், இந்தியாவும், ரஷ்யாவும் ஒரே நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. ஐ.நா. சபை, பிரிக்ஸ், கிழக்காசியக் கூட்டமைப்பு, ஜி-20 அமைப்பு, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு ஆகியவை இந்தியா-ரஷ்யா உறவை உலகளாவியதாக மாற்றியுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறுகையில், 'பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இருநாடுகளுக்கு இடையேயும் மிகவும் நெருங்கிய ஒத்துழைப்பு நிலவுகிறது' என்று தெரிவித்தார். (இ-7)







யாழ்ப்பாணம் கந்தர்மடம் பண்பாட்டு மலர்ச்சிக்கூடத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.பத்மினி சிதம்பரநாதன் தலைமையில் விஜயதசமியை முன்னிட்டு கலைத்திறன் வகுப்புக்கள் ஆரம்பமாகின. இந்த நிகழ்வில் சிறுவர்கள் பாடல், கதை கூறல், ஆடல் , பாடல் மற்றும் சித்திரம் , நடனம், சங்கீதம், மிருதங்கம், ஓகன் உட்பட கலைத்திறன் வகுப்புக்களில் மிகவும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.







சண்டிலிப்பாய் மணிமேகன் முன்பள்ளியின் சிறுவர் தினமும் ஆசிரியர் தினமும் முன்பள்ளித்தலைவர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக முன்பள்ளிப் பருவ உத்தியோகத்தர் செல்வி.சி.கயல்விழி பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.



நுழைவாயில் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய முதியோர் தின விழாவில் கலந்து கொண்ட முதியோர்கள் பிரதம விருந்தினர், நிர்வாகத்தினரைப் படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலுள்ள பிரிட்டிஸ் ஆங்கில சிறுவர் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவின் போது...




நோர்வே மகளிர் அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் 140 பேருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வைபவம் அண்மையில் பாடசாலை அதிபர் த.செல்வக்குமார் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொது செயலாளருமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உப செயலாளர் சி.த.காண்டீபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வடமராட்சி செவிப்புலன் அற்றோர் சங்க காணிக் கொள்வனவுக்கு சிவன் அறக்கட்டளை நிறுவனத்தினால் நான்கு இலட்சம் ரூபா நிதியுதவி அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் இயங்கும் இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிதி சிவன் அறக்கட்டளை நிறுவுநர் க.வேலாயுதத்தால் கரவெட்டி பிரதேச செயலர் சிவஸ்ரீ முன்னிலையில் வடமராட்சி செவிப்புலனற்றோர் சங்கத் தலைவரிடம் வழங்கப்பட்டது. (படம்: அரவிந்தெய்தியாளர்)




கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய பழைய மாணவன் ம. ஸ்ரீதாசனால் இரு மாணவிகளுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் உதவும் இதயங்களின் தாயகச் செயற்பாட்டாளர் எஸ். சஜீவன், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.



கொட்டடியில் நடைபெற்ற முதியோர், சிறுவர் தின விழாவில் யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பாளர் உரையாற்றுவதையும் விருந்தினர்கள், நிகழ்வில் பங்கேற்றோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தத்திட்டம்

(கொழும்பு)

**இலங்கைக்கும் - சீனாவிற்கும் இடையில் நாடாளுமன்ற ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்திக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கும் சீன சட்டவாக்கச் சபையின் மிக முக்கிய உறுப்பினரான ஷாங் டிஜியாங் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.**

சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸின் குழுக்களின் தலைவரான ஷாங், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை அனைத்துத் துறைகளிலும் கட்டியெழுப்புவதற்கு இலங்கையின் புதிய அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சீனாவிற்கு விஜயம் செய்திருந்ததுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் அங்கு சென்றுள்ள சபாநாயகர் கரு ஜயசூரியவிடம், இரு நாடுகளுக்கும் சீன சட்டவாக்கச் சபையின் மிக முக்கிய உறுப்பினரான ஷாங் டிஜியாங் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது. (இ-7)

# சுற்றுலா விசாவில் வெளிநாடு செல்வோருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் வெளிநாட்டு வேலைக்கு செல் லும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நபரும் சுற்றுலா விசா மூலம் வெளிநாட்டில் வேலைக்கு செல்ல முடியாதென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வெளிநாட்டிற்கு செல்பவர்களுக்கு எதிராக தராதரம் பாராமல் சட்டம் செயற்படுத்தப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



சுற்றுலா விசா மூலம் டுபாய் சென்று தொழில் ஒன்றை பெற்றுக் கொள்ள முயன்ற பெண்ணொருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

திருகோணமலை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணை பிரிவினால் குறித்த பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த கைது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# விசேட கூட்டமொன்றை நடத்த தயாராகும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், விசேட கூட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை 18ஆம் திகதி இரவு 7 மணிக்கு இந்த விசேட கூட்டம் நடத்தப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர்கள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவின் கொழும்பில் அமைந்துள்ள இல்லத்தில் இந்த சந்திப்பு நடத்தப்படவுள்ளது.

சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானங்களை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பின் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து விசேட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளனர். (இ-7)

# இலங்கையில் தயாரிக்கப்படும் படகுகளுக்கு ஐரோப்பாவில் அதிக கேள்வியுள்ளது-அமரவீர



இலங்கையில் தயாரிக்கப்படும் அனைத்து வகையான படகுகளுக்கும் ஐரோப்பாவில் அதிக அளவிலான கேள்வியுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் தயாரிக்கப்படும் படகுகள் மிகவும் தரமான நிலையில் உள்ளமையினால் கடந்த வருடத்தில் மாத்திரம் படகு உற்பத்தி மூலம் 80 மில்லியன் டொலருக்கும் அதிகமான வருமானம் கிடைத்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே மற்றும் அவுஸ்திரேலியா போன்ற ஐரோப்பிய நாடுகளிலும், இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு போன்ற ஆசிய நாடுகளிலும் இந்த படகிற்கான கேள்வி அதிகமாக காணப்படுகின்றது.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட படகுகளில் தாக்குதல் படகுகள், சுற்றுலா பயணங்களுக்காக பயன்படுத்தப்படும் படகுகள், பாதுகாப்பு படகுகள் மற்றும் கடற்பாதுகாப்பு படகுகளுக்கே அதிக கேள்வி உள்ளது.

அத்துடன் இந்த வருட இறுதியில் படகு உற்பத்தியின் மூலம் 100 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### மனைவி புறக்கணிக்கப்பட்டால்...

ஒரு தெருவின் முனையில் இரு கார்கள் மோத இருந்தன. தெய்வாதீனமாக அது தவிர்க்கப்பட்டது. கார்களை ஓட்டிய இருவரும் சண்டை போட்டார்கள்.

வேடிக்கை பார்க்கக் கூட்டம் கூடியது. ஒருவழியாக இருவரும் காரில் ஏறிப் புறப்பட்ட போது– அதிர்ச்சி! இருவர் கார்களிலும் இருந்த பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

கணவன் மனைவியின் போரும் இத்தகையதுதான். நீ செய்தது தான் தவறு – நீங்கள் செய்வது தான் தவறு எனத் தங்கள் தவறுகளை உணராமல் பிறரைக் குற்றம் சாட்டிக்கொள்கிறார்கள். முடிவில் தான் தங்கள் மனஅமைதி என்னும் அரிய பொருள் களவாடப்பட்டிருப்பதை உணர்கிறார்கள்.

கணவன் மனைவிக்குள் எவ்வளவு கருத்து வேறுபாடு இருந்தாலும் அது அவர்களது குழந்தைகளுக்குக் கூடத் தெரியக் கூடாது. வீண் கௌரவப் போர்வையில் புகுந்து கொண்டு பெற்றதுகளைத் தவிர்க்கப்படுவது புத்திசாலித்தனமாகாது.

கருத்து வேறுபாடு என்கிற நிலையெல்லாம் தாண்டியொருவரையொருவர் புறக்கணிக்கும் ( விவாகரத்து அல்ல) நிலை உருவாகிவிட்டால்பிள்ளைகளின்கதிமேலும் மோசமாகிவிடுகிறது.

கணவன் புதுப் பழக்கங்களைப் பழகிக் கொண்டால் மனைவியைப் புறக்கணிக்க ஆரம்பிக்கிறான். இதுபோதாது என்று தன் மாமியாரும் நாத்தனாரும் இந்த நேரத்தில் தன் கணவனை அதிகமாகக் கவனிக்கப் போக , தான் ஈயாக எறும்பாகக் கூட மதிக்கப்படவில்லை என்ற எண்ணம் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு உருவாகும்.

புறக்கணிக்கப்படுவதாகக் கற்பனை செய்து கொள்ளும் பெண்களும் உண்மையில் புறக்கணிக்கப்படும் பெண்களும் கணவனை எதிர்த்து வெல்வதற்கு நினைக்காமல் அணைத்து வெல்வதற்கு முனைய வேண்டும். வீணே ஸ்வரைக் செய்யும் மனப்பான்மையைக் கைவிட்டுத் தன் கணவன் வியக்கும்படி ஒத்துழைக்க வேண்டும். கணவன் மனைவி போரில் யார் முதலில் தங்கள் தோல்வியை ஒப்புக் கொள்கிறார்களோ அவர்களே இறுதியில் அல்லது நிரந்தரமாக வெற்றியடைகிறார்கள்.

புதுப் பழக்கங்களை ஒரே நாளில் அடியோடு வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல் மெல்ல மெல்ல விரட்டப் போராட வேண்டும்.

ஆரம்பத்தில் கோட்டை விட்டதற்கான பலன்களை அனுபவிக்கத் தானே வேண்டும்.

எது, எப்படிப் போனாலும் மனைவியானவள் தன் பிள்ளைகளைத் தன் அணியில் வைத்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியம். இது நாளைக்கு வெளிப் பேச்சு ஏதும் அவளுக்கு எதிராக அமைந்து விடாதிருக்க உதவும்.

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்


## புத்திசாலி ஆட்டுக்குட்டி

அந்த அடர்ந்த காட்டில் நரி ஓநாய் சிங்கம் கரடி என ஏராளமான மிருகங்கள் வாழ்ந்து வந்தன. எல்லா மிருகங்களும் நன்கு கொழுத்த உடலோடு நடமாடிக் கொண்டிருந்தன. அதற்கு காரணமும் உண்டு. அந்தக் காட்டை ஓட்டியுள்ள சிறுகிராமத்தில் முத்து சாமி என்ற ஏழை வாழ்ந்து வந்தான்.

அவனது ஆட்டுக்குட்டிகள் துள்ளி விளையாடி மேய்ந்து கொண்டே வழி தவறி காட்டுக்குள் வந்து விடும். அவ்வளவு தான் உடனே அதை காலி செய்து விடும் இந்த மிருகங்கள். முத்துசாமி தனது தந்தை தனக்காக சொந்தமாகக் கொடுத்த நாற்பது ஆடுகளையும் ஒவ்வொன்றாக இழந்து கொண்டிருந்தான்.

இப்போது மொத்தம் பன்னிரெண்டு ஆடுகளே மிஞ்சியிருந்தது. இதனால் முத்துசாமி மிகுந்த வேதனை அடைந்தான். சாப்பிடக்கூட மனமில்லாமல் துவண்டு போய் ஆடுகளை அடைத்து வைத்திருந்த பட்டியின் அருகில் படுத்து விட்டான்.

'கண்ணுங்களா! நீங்களாவது என்னை விட்டு போயிடாம பத்திரமாக இருங்கப்பா. என் கண்ணைத் தப்பி வெளியே போயிடாதீங்க. அவ்வளவுதான் அந்த கொடிய மிருகங்கள் உங்க எலும்பைக் கூட விட்டுவைக்காதுங்க. அதனால பாதுகாப்பா இங்கேயே இருங்கப்பா. என்னை மேலும் மேலும் வேதனைப்பட வைக்காதீங்க' என்றபடியே தரையில் படுத்து சற்று நேரத்தில்



தூங்கியும் விட்டான்.

அவன் பேசியதை கேட்டுக் கொண்டிருந்த ஆடுகள் முத்து சாமியின் நிலையைக் கண்டு மனம் வருந்தின. தங்களை வளர்த்து ஆளாக்கியவன் துன்பத்தை அவைகளால் தாங்க முடியவில்லை. அவனுக்கு தங்களால் எந்த உதவியும் செய்ய முடியவில்லையே என வேதனைப்பட்டன.

அப்போது அந்தக் கூட்டத்தில் இருந்த ஆடு ஒன்று தன் அம்மாவிடம் "அம்மா! எத்தனைநாள் தான் நாம் ஓடியாடி விளையாட முடியாமல் நம் விருப்பத்திற்கு புற்களை மேயாமல் இப்படி பட்டிக்குள்ளேயே அடைந்து கிடப்பது. இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டாமா" என்றது. தாய் ஆடு தனது பிள்ளையை பரிவோடு நக்கியது. "மகனே! உன் கவலை எனக்கு புரிகிறது.

ஆனால் இது தானே நமக்கு பாதுகாப்பு வளையம். இதைத் தாண்டிப் போன நம் உறவினர்களின் நிலை என்னவாயிற்று என்பதுதான் உனக்குத் தெரியுமே. தெரிந்தும் நீ வெளியே செல்ல ஆசைப்படலாமா. பாவம் நம் எஜமானர் நம்மில் பாதிக்கு மேல் இழந்து தவிக்கிறார்.

அவருக்கு நாம் எந்த கஷ்டத்தையும் கொடுக்கக்கூடாது. நமக்குத் தேவையான உணவுதான் கிடைக்கிறதே. சாப்பிட்டு விட்டு படுத்துக் கொள்வோம்" என்றது தாய் ஆடு.

மறுப்பாக தலை அசைத்தது குட்டி ஆடு. "அம்மா உங்களைப் போல் என்னால் இருக்க முடியாது. இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும்.

அப்போதுதான் நாம் சுதந்திரமாக நடமாடமுடியும். நம் எஜமானரும் இப்படி நமக்காக காவல் இருக்காமல் அவரது வேலையைப் பார்க்க முடியும். அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்" என தனது திட்டத்தைக் கூறியது.

அதைக் கேட்ட மற்ற ஆடுகளுக்கு சந்தோஷம் தாளவில்லை. "டேய் கண்ணா! நீ மட்டும் இதை வெற்றிகரமா செய்து முடித்து விட்டால் நமக்கெல்லாம் இந்த சிறையிலிருந்து விடுதலை. நமது இஷ்டத்திற்கு மேய்ந்து விட்டு இரவில் வீடு திரும்பினால் போதும். நீ இதை சரியாகச் செய்து விடுவாயல்லவா" என்றது வயது முதிர்ந்த ஆடு.

தாய் ஆடு பதறியது. "மகனே! வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு. எனக்கு ஒரே மகன் நீ. உன்னை ஒருபோதும் நான் இழக்கமாட்டேன். காட்டுக்குள் போய் விட்டு திரும்பியவர் எவருமில்லை. நான் உன்னை அனுப்பமாட்டேன்" என்று கண்ணீர் சிந்தியது. "அம்மா அழாதே! நான் புத்திசாலி என்று நீதானே அடிக்கடி சொல்வாய். இப்போது நீயே தடை போடலாமா. நம் இனத்தை எப்படி அழித்தன அந்த மிருகங்கள்.

அவற்றை நம்மால் அழிக்க முடியவிட்டாலும் விரட்டியடிக்கலாமே. அம்மா தைரியமாக இரு. நான் வெற்றியோடு திரும்புவேன். பாட்டி அம்மாவுக்கு தைரியம் சொல்.

நான் வெற்றிச் செய்தியோடு வருகிறேன்" என்றவாறு பட்டியின் மீதேறி தாவி வெளியில் குதித்தது உற்சாகமாக துள்ளியவாறு காட்டை நோக்கிச் சென்றது.

(தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

10.2016 17

- 1091 - லண்டனில் பெரும் சூறாவளி இடம்பெற்றது.
- 1346 - இங்கிலாந்தின் மூன்றாம் எட்வேர்ட் ஸ்கொட்லாந்தின் இரண்டாம் டேவிட் மன்னனைச் சிறைப்பிடித்து பதினோராண்டுகள் லண்டன் கோபுரத்தில் அடைத்து வைத்தான்.
- 1448 - கொசோவோவில் ஹங்கேரிய இராணுவம் ஓட்டோமான் படைகளினால் தோற்கடிக்கப்பட்டனர்.
- 1604 - ஜேர்மனிய வானியலாளர் ஜொகான்னஸ் கெப்லர் வானில் திடீரென மிக ஒளிர்வுள்ள விண்மீன் (எஸ்.என். 1604) தோன்றுவதைக் கண்டார்.
- 1660 - இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் மன்னனுக்கு மரண தண்டனையை அறிவித்த ஒன்பது பேர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1662 - இங்கிலாந்தின் இரண்டாம் சார்ல்ஸ் டன்கேர்க் நகரை 40,000 பவுணிற்கு பிரான்சுக்கு விற்றான்.
- 1805 - நெப்போலியனின் போர்கள்: ஊல்ம் நகரில் இடம்பெற்ற சமரில் ஆஸ்திரியப் படையினர் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகளிடம் வீழ்ந்தன.
- 1806 - எயிட்டியின் மன்னன் முதலாம் ஜாக் படுகொலை செய்யப்பட்டான்.
- 1907 - மார்க்கோனி அட்லாண்டிக் நகரங்களுக்கிடையேயான தனது முதலாவது கம்பியில்லாத் தொடர்பை கனடாவின் நோவா ஸ்கோசியாவுக்கும், அயர்லாந்துக்கும் இடையே ஏற்படுத்தினார்.
- 1912 - முதலாம் பால்க்கன் போர்: பல்கேரியா, கிரேக்கம், சேர்பியா ஆகியன ஒட்டோமான் பேரரசுடன் போரை அறிவித்தன.
- 1933 - அல்பேர்ட் ஐன்ஸ்டைன் நாசி ஜெர்மனியில் இருந்து வெளியேறி ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினார்.
- 1961 - பாரிசில் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான அல்ஜீரியர்கள் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1965 - 1964 நியூயோர்க் உலகக் கண்காட்சி இரண்டாண்டுகளின் பின்னர் முடிவுற்றது. மொத்தமாக 51 மில்லியன் மக்கள் இக் கண்காட்சியைக் கண்டு களித்தனர்.
- 1966 - நியூயோர்க்கில் கட்டடம் ஒன்றில் இடம்பெற்ற தீயில் 12 தீயணைப்புப் படையினர் சிக்கி இறந்தனர்.
- 1979 - அன்னை தெரேசா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- 1995 - யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்ற இலங்கை இராணுவம் ரிவிரெச நடவடிக்கையை ஆரம்பித்தது.
- 1998 - நைஜீரியாவில் பெற்றோலியக் குழாய் வெடித்ததில் 1200 கிராமத்தவர்கள் கொல்லப்பட்டனர்.
- 2003 - தாய்ப்பே 101 உலகின் மிக உயரமான வானளாவி ஆனது.
- 2006 - ஐக்கிய அமெரிக்காவின் மக்கள் தொகை 300 மில்லியனை எட்டியது.
- 2006 - ஈழப்போர்: புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பு நிலையம், இலங்கை அரசின் வான் குண்டுத் தாக்குதலில் முழுமையான சேதமடைந்தது.

பிறப்புக்கள்

- 1906 - கே. பி. ஹரன், தமிழ்ப் பத்திரிகையாளர். (இ. 1981)
- 1965 - அரவிந்த டி சில்வா, இலங்கை அணியின் துடுப்பாளர்.
- 1970 - அனில் கும்ப்ளே, இந்திய அணியின் சுழற் பந்தாளர்.
- 1972 - எமினெம், அமெரிக்காவின் ராப் இசைக்கலைஞர்.

இறப்புகள்

- 1981 - கவிஞர் கண்ணதாசன். (பி. 1927)

சிறப்பு நாள்

- உலக வறுமை ஒழிப்பு நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 50 | 60 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 50 | 100 | 120 | 100 |
| தக்காளி | 120 | 100 | 65 | 70 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 70 | 120 | 90 | 80 |
| கரட் | 120 | 100 | 90 | 80-160 | 160 | 80 |
| பூசணி | 30 | 30 | 20 | 50 | 40 | 30 |
| புடோல் | 50 | 50 | 30 | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 140 | 100 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 65 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 130 | 200 | 110 | 150 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 70 | 120 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 90 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 50 | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 140 | 160 | 90 | 150 | 200 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 40 | 50 | 80 | 50 |
| கறிமிளகாய் | 140 | 120 | 100 | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 80 | 100 | 80 | 100 |
| போஞ்சி | 200 | 200 | 150 | 200 | 200 | 200 |
| [illegible] | 80 | — | 30 | 50 | 60 | 50 |
| கீரை - பிடி | 20 | 20 | 25 | 30 | 30 | 15 |
| தேசிக்காய் | 600 | 600 | 500 | 400-600 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-30 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 150 | — | — | 160 | 150 | 130 |
| முள்ளங்கி | 60 | — | 30 | 50 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 20 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 15 |
| [illegible] | — | 20 | — | — | — | — |

# மத்திய வங்கி குறித்த கோப் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

**மத்திய வங்கி முறி விற்பனை தொடர்பில் சர்ச்சைக்குரிய கோப் குழுவின் அறிக்கை, எதிர்வரும் 25ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

இது தொடர்பில் கோப் குழுவினர் இறுதி முடிவுக்கு வந்துள்ளனர்.

இந்தநிலையில் குறித்த அறிக்கை தொடர்பில் 25 ஆம் திகதியன்று முழுநேர விவாதம் நடத்தப்படும்.

இதற்கிடையில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, எதிர்வரும் 20ஆம் திகதியன்று வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னதான முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். (இ-7)

# அரசிற்கு புதிய நெருக்கடி கொடுக்கத் தேவையில்லை

## முன்னாள் அமைச்சர் கூறுகிறார்



அரசாங்கத்திற்கு புதிதாக நெருக்கடி கொடுக்க வேண்டிய அவசியமில்லை என முன்னாள் அமைச்சர்உ உ- தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

அரசாங்கத்திற்கு கூட்டு எதிர்க்கட்சி நெருக்கடி கொடுக்க வேண்டியதில்லை, அரசாங்கம் ஏற்கனவே நெருக்கடியிலேயே உள்ளது.

பாரிய நிதி மோசடிகள் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே இன்று அமைச்சர்களாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றார்கள்.

அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கவோ அழுத்தங்களை பிரயோகிக்கவோ இல்லை.

மக்கள் பாதிக்கப்படும் போது அவர்களுக்கு நேரடியாகவே உதவிகளை வழங்க தமது தரப்பு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையின் வளர்ச்சிக்கு ஜேர்மன் அரசாங்கம் உதவி

(கொழும்பு)

இலங்கையின் வளர்ச்சிக்கு ஜேர்மனி அரசாங்கம் தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் இலங்கைக்கான தூதுவர் மொர்ஹூட் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை நேற்று முன்தினம் சந்தித்த போது இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் ஜேர்மனியின் பல உயர்மட்ட அளவிலான தொழில் முனைவோர் இலங்கையில் முதலீடுகளை செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் ஜேர்மன் தூதுவர் இதன்போது குறிப்பிட்டார்.

இதற்கான சூழ்நிலை இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மருந்து பொருட்களின் விலைகள் குறைப்பு!

(கொழும்பு)

மருத்துவப்பொருட்களுக்கான விலைக்குறைப்புக்கள் இந்த வாரத்தில் வர்த்தமானிப்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் தகவல்படி 47 மருந்துப்பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாகவும் இந்த வாரம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் இந்த விலைக்குறைப்புகள் நடைமுறைக்கு வரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நோயாளிகளுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 871

**விஜா**

தோற்றால் புலம்பாதே "போராடு"
கிண்டலடித்தால் கலங்காதே
"மன்னித்துவிடு"
தள்ளினால் தளராதே "துள்ளியெழு"
நஷ்டப்பட்டால் நடுங்காதே
"நிதானமாய் யோசி"
ஏமாந்துவிட்டால் ஏங்காதே
"எதிர்த்து நில்"
"வெற்றி நிச்சயம்"

**பசி**

என்னங்க..சீக்கிரம் டி.வி.ஆஃப் பண்ணுங்க..!
ஏன் பையன் படிக்கிறானா..?



இல்லைங்க..! பக்கத்து வீட்டிலே ஏதோ சண்டை...
ஒண்ணுமே கேட்க மாட்டேங்குது..!

**ராஜு**




வாக்குக்காக 2016 இல் தீர்வு என்று சொன்னீங்க....அதைக்கூட மன்னிக்கலாம்... ஆனா திலீபனுக்கு விளக்கு, கொளுத்தினா ஏமாந்து வாக்குப் போடுவோம் என்று நினைச்சிங்க பாருங்க...அதைத்தான் பொறுத்துக்கவே முடியவில்லை.....

**கோபிராஜ்**



காதலி : நம்ம கல்யாணத்த கோவில்ல வச்சுக்கலாமா இல்ல மண்டபத்துல வச்சுக்கலாமா ?
காதலன் : கோவில்ல தான்.
காதலி : ஏன் கோவில்ல ?
காதலன் : போற உசுரு கோவில்லயே போகட்டும்.புண்ணியமாச்சும் கிடைக்கும்.

**சங்கர்**

சிலருக்கு மனைவி
"தேவயானி" போலவும்
சிலருக்கு மனைவி
"தேவையா....? நீ"
போலவும்
அமைந்து விடுகிறது.

**ராஜ்**

இனிமேல் குடிக்க மாட்டேன்
என்று வீட்டுக்காரர் என் காலில விழுந்து
மன்னிப்பு கேட்டார்.அப்புறம்



என் காலில இருந்த கொலுசை
காணோம்....

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

**WINGS**

A FESTIVAL OF ARTS

අපේක්ෂාවේ පියාසැරිය

நம்பிக்கையின் சிறகசைப்பு

கலைத்துவச் செயற்பாடுகள் மற்றும் உருவாக்கங்கள் மூலமாக நல்லிணக்க எண்ணக்கருவை அணுகும் வகையில் நாடு முழுவதிலிமிருந்தான கலைஞர்கள், செய்முறையாளர்கள், எழுத்தாளர்கள், இளையோர்கள் மற்றும் கலைக்குழுக்களினால் வடிவமைக்கப்பட்ட கலைப்படைப்புக்களை காட்சிப்படுத்தும்

**வடபுலத்திலிருந்து ஆரம்பமாகும் தேசியமட்ட பெருவிழா**

# கலைகளின் சங்கமம்

**2016 ஒக்டோபர் மாதம் 21,22,23 ஆம் திகதிகளில்**
**காலை 9.00 மணி தொடக்கம் மாலை 9.00 மணி வரை**
**கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க கலாசார மண்டபம் மற்றும்**
**கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில்**

**தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களின் பாரம்பரிய கலைகள், மேடை நாடகங்கள், சிறுகதை எழுத்தாக்கங்கள், கருத்துக்கள நாடகங்கள், ஆடல், பாடல் மற்றும் நடன ஆற்றுகைகள், திரைப்படக் காட்சிகள், கவியரங்கம், கலைக்கருத்தரங்குகள் மற்றும் ஓவியக்கண்காட்சி போன்ற நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன.**

**அனுமதி இலவசம்**

விழா பங்குதாரர்கள்:

ජාතික සමගිය හා සංහිඳියා කාර්යාලය
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம்
OFFICE FOR NATIONAL UNITY AND RECONCILIATION

European Union

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

giz

care

YOU4 CREATE

www.wingssrilanka.com

# புகைப்படக் கற்கைநெறி முதன்முறையாக யாழ்ப்பாணத்தில்

Metropolitan Institute of Bisness Management(MIBM) தற்போது யாழ்ப்பாணத்தில் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

Management, Photography, Language ஆகிய துறைகளில் கொழும்பில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட MIBM இன் சேவை யாழ். மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைய இருக்கின்றது.

எதிர்வரும் 23ம் திகதி Certificate in Basic Photography என்ற Course யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் 9.00 மணி முதல் 11 மணி வரையிலான காலப் பகுதியில் ஆறு ஞாயிற்றுக்கிழமைகளில் இவ் வகுப்புத் தொடர்ந்து நடைபெறும் என்று அந்த நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான செல்வரத்தினம் நிமால் தெரிவித்தார்.

அவர் புகைப்படக் கல்வியைப் பற்றி மேலும தெரிவிக்கையில்,


இவ் வகுப்பின்போது ஒரு டிஜிட்டல் கமராவை பாவித்து எவ்வாறு தரமான படங்களை எடுப்பது என்பதைப் பற்றி விரிவாக கற்பிப்பதோடு செயற்பாட்டு முறையிலும் தரமான படங்களை எடுத்துக் காண்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளிலும் புகைப்பட கல்வியை கற்பிக்கும் ஒரே நிறுவனம் MIBM என்பது குறிப் பிடத்தக்கது.

Certificate in Basic Photography, Course முடித்தவர்கள் அதன்பின் Certificate in Advanced Photography மற்றும் Diploma in Photography போன்ற பயிற்சிநெறிகளில் பயில்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது மாத்திரமன்றி தனிப்பட்ட முறையில் புகைப்படக் கல்வியை கற்க மாணவர்கள் விரும்புவார்களானால் அவர்களுக்கான வழிமுறைகளும் செய்து தரப்படும்.

இதைப் பற்றிய விபரங்களை மேலும் தெரிந்து கொள்ள 0776615152 என்ற இலக்கத்துக்கு அல்லது info@mibm.lk என்ற முகவரியோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். அத்தோடு www.mibm.lk என்ற இணையத் தளத்தின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.



இதற்கு அடுத்த படியாக Diploma in Leadership & Management என்ற கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. முகாமைத்துவ கற்கை நெறிகளில் இக் கற்கைநெறி MIBM இன் மிகப் பிரபல்யமான ஒரு கற்கை நெறியாகும். இக் கற்கைநெறி மூன்று முதல் நான்கு மாத காலப் பகுதியில் கற்பிக்கப்படும்.

MIBM ஆனது கல்வித் துறையில் மாத்திரமல்லாது Consultation, Recruitment ஆகிய துறைகளில் தனது சேவையை செய்து கொண்டு வருகிறது. நட்டத்தில் இயங்கும் அல்லது எதிர்பார்த்த இலாபத்தைப் பெறமுடியாமல் இருக்கும் நிறுவனங்கள் MIBM உடன் தொடர்புகொண்டு அவர்களது ஆலோசனைச் சேவையை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் நிறுவனங்களுக்கு பணியாளர்கள தேவைப்படும்போது அல்லது MIBM இன் மாணவர்களுக்கு வேலை தேவைப்படும் போது அத் தேவையை MIBM இன் மூலமாக நிவர்த்தி செய்து கொள்ளலாம். இது மாத்திரமன்றி நிறுவனங்கள் தமது ஊழியர்களை முகாமைத்துவம் அல்லது ஆளுமைத்திறனில் பயிற்சியளிக்க வேண்டுமானால் அவர்களும் MIBM உடன் தொடர்பு கொள்ளலாம்.

# எண்ணம்... செயல்பாடு... வெற்றி!?

அமெரிக்காவில் உள்ள ஒரு கல்வி நிறுவனத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அங்குள்ள சுமார் அறுநூறு மாணவர்களிடம் "நீங்கள் சந்திக்கும் மிகக் கடினமான பிரச்சினை என்ன?" என்ற கேள்வி கேட்கப்பட்டது.

தங்களிடம் போதிய சுயநம்பிக்கை இல்லை என்ற பதிலே கிட்டத்தட்ட 75 சதவீத மாணவர்களிடமிருந்து கிடைத்திருக்கின்றது. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலேயே இந்த நிலையென்றால், இலங்கை போன்ற வளரும் நாடுகளின் இளைய சமுதாயத்தின் நிலை என்ன?

### இன்றைய தேவை!?

இளமையில் ஏற்படும் அவநம்பிக்கை போன்ற கொடுமையான நிலை வேறு எதுவுமில்லை என்பது அமெரிக்க தத்துவவாதியும் நகைச்சுவையாளருமான மார்க் டுவைன் அவர்களின் கூற்று. இதுவே இன்று நம்முன் இருக்கும் உண்மையான சவால் என்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் சி.எஸ்.மிஸ்ரா. இந்த சவாலானது, எவ்வாறு இன்றைய இளைஞர்களிடம் நம்பிக்கையினை விதைப்பது?, எதிர்மறை அணுகுமுறையிலிருந்து நேர்மறை அணுகு முறையாக எவ்வாறு மாற்றுவது?, அவர்களுடைய வெளிப்புற பார்வையினை எப்படி அவநம்பிக்கையிலிருந்து நம்பிக்கையானதாக மாற்றுவது? என்பனவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. வெற்றிக்கான வழி, முயற்சி மற்றும் செய்யும் பிழைகளில் இருந்தே கிடைக்கின்றது. ஆக, சந்தேகமேயில்லாமல் இது மிகவும் கடினமான ஒன்றுதான். ஆனால் முடியாதது அல்ல.

### எது வெற்றி!?

ஏன் சிலர் மட்டும் மிகப்பெரிய வெற்றிகளையும், மற்றவர்கள் தோல்வியினையும் அடைகிறார்கள்?. ஏன் சிலர் பணக்காரர்களாகவும், பலர் ஏழைகளாகவும் இருக்கின்றார்கள்?. ஏன் சிலர் வசதியான வீடுகளிலும், மற்றவர்கள் சிறிய, குறைந்த வசதியுடைய அல்லது குடிசை வீடுகளிலும் வாழ்கிறார்கள்?. சிலர் மரியாதையாகவும் மற்றும் சிலரோ கண்ணியக்குறைவாகவும் நடத்தப்படுவதற்கான காரணம் என்ன?. இதற்கெல்லாம் காரணம், அந்த சிலரின் கடின உழைப்போ அல்லது அதிர்ஷ்டமோ எதுவானாலும் இன்று வெற்றி அவர்கள் கையில். இதில், வெற்றி என்ற ஒன்று எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது? அல்லது வெற்றி என்றால் என்ன? என்பதைப் பார்ப்போம்.

பொதுவாக வெற்றி என்பது "பணமே" என்ற கருத்தே பரவலாக சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட ஒவ்வொருவரும் வெற்றியினைப் பற்றி பேசுவது, அதிகப்படியான பணம், அதிகப்படியான வளர்ச்சி, அதிகப்படியான செழுமை போன்றவை பற்றியே. உண்மையில், பணம் வெற்றியை தீர்மானிக்கக் கூடிய காரணி அல்ல என்கிறார் ஆசிரியர். ஆனால், நாம் வெற்றி பெறும்போது பணம் நம்மை துரத்தி வருகின்றது என்பதையும் தெளிவுபடுத்துகின்றார்.

உதாரணமாக தொழிலதிபர், நடிகர், இசைக்கலைஞர் அல்லது விளையாட்டு வீரரை எடுத்துக் கொள்ளுங்கள். ரஜனிகாந்த், ரஹ்மான், டெண்டுல்கர் போன்றவர்கள் தங்களுடைய துறைகளில் மிகப்பெரிய அளவில் வெற்றி அடைந்தவர்கள். அந்த வெற்றியால் தான் அவர்கள் பணக்காரர்களே தவிர, பணக்காரர்களாக இருந்ததனால் அவர்களுக்கு இவ்வளவு பெரிய வெற்றி கிடைத்து விடவில்லை. பணம் எப்போதும் வெற்றியின் துணைபொருள் மட்டுமே.

### முடிவில்லா வெற்றி!?

வெற்றிக்கு ஒருபோதும் முடிவு இல்லை ஏனென்றால் அது ஒரு செயல்முறை என்கிறார் ஆசிரியர். மேலும், வெற்றியானது நாம் சென்றடையும் இடமோ அல்லது இலக்கோ அல்ல, அது ஒரு பயணம் என்கிறார். ஒரு குறிப்பிட்ட செயலில் வெற்றி கிடைக்கும்போது, நாம் அடுத்த செயலுக்கான திட்டத்திற்கு தயாராகிவிடுகிறோம். தேர்வில் வெற்றிபெற்று பட்டம் பெரும் மாணவர் ஒருவர், அடுத்ததாக தனது வாழ்க்கைக்கான திட்டத்தில் இறங்கிவிடுகிறார். ஆக, வெற்றியானது ஒருபோதும் முடிந்துவிடக்கூடிய செயல் அல்ல, மாறாக அது ஒரு தொடர்ச்சியான வாழ்க்கைச் செயல்பாடு என்பதே ஆசிரியரின் கூற்றாக இருக்கின்றது.

### எண்ணமும் கற்பனையும்!?

ஒரு செயல்பாட்டிற்கோ அல்லது அந்த செயலின்மூலம் கிடைக்கும் வெற்றிக்கோ அடிப்படை காரணியாக விளங்குவது நமது எண்ணங்களும் கற்பனையுமே. இவையே வெற்றிக்கான விதைகள் என்கிறார் ஆசிரியர். உங்களால் தைரியமாக கற்பனை செய்யவும் அதற்கான நினைவும் இருந்தால், உங்களிடம் வெற்றி பெறுவதற்கான தைரியமும் உள்ளதாகவே அர்த்தம். ஒரு செடியின் விதை ஒன்றினை எடுத்து நட்டு, தினமும் நீர் ஊற்றி வருகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அது நாளடைவில் வளர்ந்து ஒருநாள் முற்றிலும் நன்கு வளர்ந்த செடியாக உங்களுக்கு கிடைக்கும் அல்லவா!. இதுவே நமது எண்ணங்களுக்கும் கற்பனைக்கும் சமமானதாக உள்ளது. அதாவது ஒரு திட்டத்தை செயல்படுத்த தேவையான யோசனையை வைத்துள்ளீர்கள். அதை உங்கள் மனதில் நட்டு, விதைக்கு நீர் ஊற்றுவது போல் தொடர்ந்து உங்களுக்குள்ளே நினைவுபடுத்திக் கொண்டே இருங்கள். மேலும், என்னால் முடியும், நான் செய்வேன் என்ற எண்ணமும் உங்களுக்குள்ளே இருக்க, ஒரு நாள் வெற்றி உங்கள் வசப்படும்.

### அணுகுமுறையில் மாற்றம்!?

உங்கள் அணுகுமுறையில் ஏற்படும் மாற்றத்தின் மூலமே, உங்களுக்கான அனைத்து நிலைகளிலும் மாற்றத்தைக் காண முடியும். வெற்றி மற்றும் சாதனைகளுக்கான 85 சதவீத காரணங்கள் அணுகுமுறையே என்கிறது புகழ் பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் ஆய்வு ஒன்று. உங்களின் கல்வி தகுதியோ அல்லது தொழில் நுட்ப அறிவோ உங்களது செயல்பாட்டின் ஆரம்ப நிலையில் மட்டுமே உங்களுக்கு உதவியாக அமையும். அடுத்தடுத்த செயல் முன்னேற்றங்களுக்கு பெரிதும் உதவுவது உங்களின் அணுகுமுறையே. அணுகுமுறையைப் பொருத்தே உங்கள் செயல்பாட்டின் எதிர்காலம் உள்ளது.


### இயற்கை சொல்லும் பாடம்!?

மூங்கில் மரத்திற்காக விதைக்கப்பட்டு நீருற்றி உரமிட்டு தொடர்ந்து கண் காணிக்கப்படுகிறது. அதன் வளர்ச்சியில் முதல் நான்கு வருடத்தில் ஒன்றும் முன்னேற்றமில்லை. ஆனால் அதன் ஐந்தாவது வருடத்தின் சில நாட்களில் வேகமான வளர்ச்சி யினைக் காட்டுகிறது. ஆறே வாரங்களில் கிட்டத்தட்ட தொண்ணூறு அடி வளர்கிறது அந்த மூங்கில்.

மூங்கில் வளர ஆறு வாரங்களே தேவைப்பட்டதா? அல்லது மொத்தமாக ஐந்து வருடங்கள் தேவைப்பட்டதா? என்பதே நமக்குள்ள கேள்வி. அதன் வளர்ச்சிக்கு ஐந்து வருடங்களுமே தேவைப்பட்டது என்பதே உண்மை அல்லவா!. ஒருவேளை பொறுமையிழந்து அந்த மூங்கிலுக்கான கண்காணிப்பை பாதியில் நிறுத்தியிருந்தால், அதன் வளர்ச்சி கிடைத்திருக்காது அல்லவா!. அதுபோலவே, வெற்றியை நோக்கிய பாதையில் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் நமது செயல்களை செய்துகொண்டே இருக்க வேண்டும்.

தீர்வு நம் கண்களுக்கு உடனே தெரியாவிட்டாலும், வெற்றிக்கான வளர்ச்சி நமது தொடர்ச்சியான செயல்பாட்டின் மூலமாக நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். இறுதியில் வெற்றியும் வசமாகும்.

மனதை வலுப்படுத்த உதவும் சுயநம்பிக்கை, நேர்மறை எண்ணங்கள் மற்றும் அதனோடு சேர்ந்த அணுகுமுறை போன்றவையும், வெற்றி பற்றிய தெளிவான புரிதலும் இருந்துவிட்டால் எதையும் எட்டிப்பிடிக்க முடியும் என்பதே நாம் அறியும் பாடம்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,582.34 | 6,482.54 ↓ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,654.43 | 3,615.12 ↓ |

விலை அசைவுகளின் அடிப்படையில்: புரள்வு (ரூபா. மில்.) 3,296.76

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** எஸ்.எம்.பி. லீசிங்(ஓ) (0.40). சொப். கிரடிட் (65.00). களனிவேலி (63.00). கஹாகொல்ல (2.50) அனிலங்கா ஹோட்டல்ஸ் (2.00).

**சரிவைச் சந்தித்த பங்குகள்(ரூ.):** எஸ்ராண்பட் கப்பிரல் (30.20). எஸ் எம் பி லீசிங் (0.70). பென்சி ரெஸ்சோட் (10.00). ஹோரணை (105.00). சிங்கப்பால் (1.70).

மேலதிக தகவல்கள்: www.cse.lk.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 144.85 | 148.65 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 176.62 | 182.86 |
| யூரோ (ஐரோ. ஒன்றியம்) | 159.03 | 165.17 |
| சுவிஸ் பிராங் | 145.89 | 151.84 |
| கனேடிய டொலர் | 109.12 | 113.53 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.98 | 113.94 |
| சிங்கப்பூர் டொலர் | 104.15 | 108.06 |
| ஜப்பான் யென் | 1.38 | 1.44 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.19 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.95 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் இரண்டு கட்சிகளும் மீளாய்வு



(கொழும்பு)

எதிர்வரும் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் பங்காளிகளான ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மீளாய்வு செய்யவுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இரண்டு கட்சிகளின் சார்பில் மீளாய்வுக்குழுவில் அமைச்சர்கள் மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, அகிலவிராஜ் காரியவசம், ஹரின் பெர்னாண்டோ, சரத் அமுனுகம, சுசில் பிரேமஜயந்த, அநுர பிரியதர்சன யாப்பா, மகிந்த அமரவீர, பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோர் அடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவினர் இன்று வெளியுறவுத்துறை அமைச்சில் கூடவுள்ளனர்.

இந்தக்குழு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபாலவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வரவு செலவுத்திட்டம் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்கள் சிலருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து தொடர்பான ஆவணம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சொத்து விபரங்களை வெளியிட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த விபரங்களை நாடாளுமன்றில் ஓர் பதிவு ஆவணமாக பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆவணமொன்றை பேணுவது தொடர்பில் புதிய நிலையியற் கட்டளையொன்று நாடாளுமன்றில் அறிமுகம் செய்யப்படஉள்ளது.

இந்த மாத இறுதியில் திருத்தி அமைக்கப்படும் நிலையியற் கட்டளை நாடாளுமன்றில் சமர்ப்பித்து நிறைவேற்றப்படவுள்ளது.

இதேவேளை நாடாளுமன்றில் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய 82 வீதமானோர் பல்கலைகளுக்கு அனுமதி பெறாமல் உள்ளனர்

எதிர்வரும் 2017ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மாணவர் அனுமதியில் 10வீத அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதாக உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் மோஹன்லால் கிரேரோ தெரிவித்துள்ளார்.

இந்த அடிப்படையில் வருடந்தோறும் இந்த 10 வீத அதிகரிப்பை நடைமுறைப்படுத்த அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த கல்விப்பொதுத் தராதர உயர்தரப்பரீட்சையில் 3இலட்சம் பேர் தோற்றினர். இதில் 150,000 பேர் சித்தி பெற்றனர்.

எனினும் இலவசக்கல்வி முறையின்கீழ் இதில் 27,500 பேர் மாத்திரமே பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறவுள்ளனர்.

இது பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 18வீதம் மாத்திரமே என்று ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

எனவே மீதமுள்ள 82 வீதமான இளைஞர்களின் நிலை குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் கல்வி என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் இந்தக் கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில் தொழில்சார்பு உயர்கல்வியை அறிமுகப்படுத்தும் முகமாக சட்டமூலம் ஒன்றை முன்வைக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

## அமைச்சர் ரங்கே பண்டாரவிற்கு எதிராக ஜனாதிபதி,பிரதமரிடம் முறைப்பாடு

இராஜாங்க அமைச்சர் ரங்கே பண்டாரவிற்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியாக இடையூறு விளைவித்து வருவதாக ராஜாங்க அமைச்சர் மீது ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அரசியல் கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக இடையூறு ஏற்படுத்தி வருவதாக ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தின் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் நிரோசன் பெரேரா இது தொடர்பில் எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் பிரதமருக்கு அறிவித்துள்ளார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்டத் தலைவர் பிரியங்கர ஜயரட்ன, ரங்கே பண்டார தொடர்பில் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

எதிர்காலத்தில் இது குறித்து விசாரணை நடத்தி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் உறுதியளித்தார் என நிரோசன் பெரேரா கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## காலத்தை வென்ற படங்களை தயாரித்த ஏ.பி.நாகராஜன்

276

பட உலகில் நடிகராக நுழைந்து கதை, வசன கர்த்தாவாகப் புகழ் பெற்று டைரக்டராக உயர்ந்தவர் ஏ.பி.நாகராஜன். பின்னர் திருவிளையாடல், தில்லானா மோகனாம்பாள் உட்பட பல உன்னதமான படங்களை தயாரித்தவர்.

ஏ.பி.நாகராஜன் 1928ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி பிறந்தார். சொந்த ஊர் சேலம் மாவட்டம் சங்கரி பக்கத்திலுள்ள அக்கம்மா பேட்டை. தந்தை பெயர் பரமசிவம். தாயார் லட்சுமி அம்மாள்.

**ஜமீன்தார்**

நாகராஜனின் தந்தை ஜமீன்தார். எனவே நாகராஜன் பிறந்தபோது நல்ல வசதி படைத்திருந்தார். ஆனால் சிறுவயதிலேயே தந்தையையும் தாயையும் இழந்தார். பணக்கார குடும்பம் வறுமையில் வாடியது.

இதன் விளைவாக பாடசாலைப் படிப்பை தொடர முடியாமல் நாடகக் கம்பனியில் சேர்ந்தார் நாகராஜன்.

**பெயர் மாறியது**

ஏ.பி.நாகராஜனுக்கு பெற்றோர் வைத்த பெயர் குப்புசாமி என்பதாகும். இவர் பணியாற்றிய டி.கே.எஸ். நாடக குருப்பில் மொத்தம் 3 பேர் குப்புசாமி என்ற பெயர் கொண்டவர்களாக இருந்தனர்.

இதனால் டி.கே.சண்முகம் அதற்கு ஒரு முடிவு கட்டினார். இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் குப்புசாமி என்ற பெயரை மாற்றி நாகராஜன் என்று பெயர் சூட்டினார். பிற்காலத்தில் அது புகழ் பெற்ற பெயராக மாறியது.

**பெண் வேடம்**

சிவாஜிகணேசன் நாடகங்களில் பெண் வேடத்தில் நடித்து வந்த அதே காலகட்டத்தில் ஏ.பி.நாகராஜனும் பெண் வேடத்தில் நடித்து வந்தார்.

சங்கீதக் கோவலன் நாடகத்தில் மாதவியாகவும் கண்ணகியாகவும் இரட்டை வேடத்தில் நடித்தார்.

நாகராஜனுக்கு நல்ல குரல் வளம் இருந்தது. நீண்ட வசனங்களை பேசும் ஆற்றல் பெற்றிருந்தார். தமிழ் இலக்கியங்களை தானாகவே படித்து அதில் சிறப்பு பெற்றவராக விளங்கினார்.

சிறுவனாக இருந்த நாகராஜன் இளைஞரான பின் அவரே வசனம் எழுதி இயக்கி நடிக்கவும் செய்தார். இப்படி நால்வர், மாங்கல்யம், இராமாயணம், மச்சரேகை போன்ற நாடகங்கள் அரங்கேறின. கொஞ்சக்காலம் சக்தி நாடக சபையில் பணியாற்றினார். நாகராஜனுடன் சிவாஜி கணேசன், எஸ். எஸ்.ராஜேந்திரன் போன்றவர்களும் ஒன்றாக நடித்தனர்.



படப்பிடிப்பு குழுவினருடன் டைரக்டர் ஏ.பி.நாகராஜன்.

**நால்வர்**

பின்னர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் உதவி ஒளிப்பதிவாளராக ஏ.பி.நாகராஜன் சேர்ந்தார். 1953 இல் சங்கீதா பிக்சர் என்ற நிறுவனம் ஏ.பி.நாகராஜன் எழுதிய நால்வர் என்ற கதையை படமாக்கியது. ஒரே குடும்பத்தில் 4 பிள்ளைகள். மூத்தவன் பொலிஸ் அதிகாரி. இன்னொருவன் அரசியல்வாதி. மற்றவர்கள் மாறுபட்ட குணம் கொண்டவர்கள். இதில் கடமையே உருவான பொலிஸ் அதிகாரியாக நாகராஜன் நடித்தார். ஜோடியாக நடித்தவர் மலையாள நடிகை குமாரிதங்கம்.

குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட நால்வர் வெற்றிப் படமாக அமைந்தது. கதை, வசனத்தையும் நாகராஜன் சிறப்பாக எழுதியிருந்தார். இந்தப்படம் வெளிவந்த பின் நால்வர் நாகராஜன் என்று அழைக்கப்பட்டார்.

**எம்.ஏ.வேணு**

மாடர்ன் தியேட்டர்ஸில் ஏ.பி.நாகராஜன் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அங்கு எம்.ஏ.வேணு தயாரிப்பு நிர்வாகியாக இருந்தார். சேலம் செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்தவரான வேணுவும் அதிகம் படிக்காதவர். மாடர்ன் தியேட்டர்ஸில் சாதாரண வேலையில் நுழைந்த அவர் தனது திறமையால் நிர்வாகி அந்தஸ்துக்கு உயர்ந்தார். (தொடரும்)

வீரம் நம் உடம்பின் ஆற்றல் அல்ல.
அது நம் உள்ளத்தின் பண்பு.

– காந்திஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இராமாயணப் போர் தடுக்க முடியாதது பாரதப் போர் தவிர்க்க முடியாதது

அசோகவனத்தில் சீதையை சிறை வைத்துள்ளான் இராவணன். கும்பகர்ணன் உள்ளிட்ட பலரும் சீதையை விட்டுவிடு என்று ஆலோசனை கூறுகின்றனர். எனினும் அவன் கேட்பதாக இல்லை. போர் மூண்டுவிட்டது. இராமர் சேனையுடன் சுக்கிரீவனின் வானரக் கூட்டங்கள் இணைந்து கொண்டுள்ளன.

இராமனுக்கே போரில் வெற்றி என்பது இராவணனைத் தவிர்ந்த மற்றைய எல்லோருக்கும் தெரிகிறது. இருந்தும் அவர்களால் அதை இராவணனுக்கு எடுத்துரைக்க முடியவில்லை.

போரில் தோல்வி நிச்சயம் என்று தெரிந்தும் தடுக்க முடியாது போனது இராமாயணப் போர்.

இராமாயணப் போருக்கும் பாரதப் போருக்கும் வித்தியாசம் என்ன என்று கேட்டால், இராமாயணப் போர் தனி ஒருவனின் வெறித்தனத்தால் தடுக்க முடியாமல் நடந்தது.

பாரதப் போர் அதுவன்று; அது தவிர்க்க முடியாதது; உரிமை சார்ந்த விடயம். உயிர், உடைமை, வாழ்வு என்பவற்றுடன் தொடர்புபட்டது. ஆண்ட இனம் மீண்டும் ஆள நினைப்பதில் நியாயம் இருக்கிறது. அதிலும் சில விட்டுக் கொடுப்புக்களுடன் ஆட்சி அமைக்க நினைப்பது நியாயமானது. எனவே தான் இராமாயணப் போரும் பாரதப் போரும் வேறுபட்டவை. அவை இரண்டையும் ஒன்றுபடுத்திப் பார்ப்பது அறிவுடமை அன்று.

உரிமை மறுக்கப்பட்டவர்கள் போராடுவது நியாயமானது. ஆட்சி அதிகாரத்தில் தனிமனிதனாக கோலோச்சும் இராவணன், மாற்றான் மனைவி மீது கொண்ட விருப்பம் காரணமாக தன் குலத்துக்கே பரிநாசம் தேடினான்.

இதை நாம் கூறும்போது இராவணன் மீது தங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் என்று நீங்கள் யாரும் கேட்கலாம். நாம் இங்கு சொல்வதெல்லாம் இராவணனுக்கு எதிராகவன்று. இலங்கை வேந்தன் என்ற பெருமைக்குரியவன் ஈடேறாத விருப்பம் கொண்டதால் அழிந்து போனானே என்ற ஆதங்கத்தில் மட்டுமே கூறுகின்றோம்.

இதை நாம் கூறும்போது ஒரு கவி அரங்கத்தில் ஓர் அன்பர் வாசித்த கவி வரிகள் ஞாபகத்துக்கு வருகிறது.

சீதையின் தீக்குளிப்பில் இராவணனின் கற்பும் தான் நிரூபிக்கப்படுகிறது...

கவிதையின் காத்திரம் அற்புதம் இருந்தும் சீதா தேவியின் தீக்குளிப்பு வாழ்வுக்கானது. அது இராமனுக்கு பெருமை சேர்ப்பதற்கானது. ஆனால் இராவணன் அழிந்து போனவன். மாற்றான் மனைவியை கடத்திய குற்றத்துக்குரியவன். மாற்றான் மனைவியைக் கடத்தி சிறையில் இருத்தி ஒரு பெரும் போருக்கு வழிவகுத்தவன். இத்தகையவன் சீதையின் கற்பைக் காப்பாற்றினான் என்று விழாக் கொண்டாட யாருளர்?

சரி இவற்றையெல்லாம் நாம் கூறும்போது இவையெல்லாம் எதற்கானதென்று நீங்கள் விழிப்பதும் தெரிகிறது. அந்த விழிப்போடு விதியின் விளையாட்டை எடுத்துரைப்பதுதான் நம் இலக்கு.

சூர்ப்பனகை இராமனைக் காண்கிறாள். அந்தக் காணுதல்தான் அரக்க குலத்தின் அழிவுக்கு அத்திபாரமிடுகிறது. ஆக விதி, இறைவனின் செயல் எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது என்பதை மீள வலியுறுத்துவது இராவணன் குறித்த விடயம்.

சீதையை இம்மியும் தீண்டாத இராவணன் பின்பு எதற்காக கடத்தினான் என்றொரு கேள்வி நம்மிடம் ஏற்பட்டால் அதற்கான விடை தனக்கும் தன் இனத்திற்கான அழிவை ஏற்படுத்துவதற்கானது என்பது தெரிகிறதல்லவா? ஆக, எந்த நிகழ்விலும் அதன் உள்ளார்ந்தத்தை நுணுகிப் பார்ப்பதே நல்லது. அவ்வாறு பார்ப்போமாக இருந்தால் அழிவுகள் என்பன உள்ளிருந்து ஏற்படுப வை தான்.

தர்மம், அறம் என்பன மீறப்படும் போது அதுவே கூற்றனாகிவிடுகிறது. இந்த உண்மையை இலங்கை ஆட்சியாளர்கள், சர்வதேச சமூகம் என்ற விதி பரப்பில் ஒவ்வொரு தனிமனிதர்களும் உணர்ந்து – தெரிந்து – அறிந்து கொள்வது மிக மிக அவசியமாகும்.

# மக்களின் வாழும் உரிமையை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு

நாட்டின் தற்போதைய அரசாங்கம் தனது குறுகிய காலத்தில் மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

குறுகிய காலத்தில் அனைவருக்கும் வாழும் உரிமையை உறுதிப்படுத்த எம்மால் முடிந்தது.

இன, மத, சாதி பேதமின்றி இலங்கையர்கள் என்ற வகையில் அனைவரும் முன்னோக்கி செல்லும் சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஊடாக தொடர்ந்தும் முன்னோக்கி செல்ல எதிர்பார்த்துள்ளோம்.

நிறைவேற்று அதிகாரத்தின் அழுத்தங்கள் இன்றி அனைவரும் சுயாதீனமாக தமது கடமைகளை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பை நாங்கள் ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம் என மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மக்களுக்காக அமைச்சு பதவியை துறக்க தயார்

## திகாம்பரம் சூளுரை

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கையான ஆயிரம் ரூபாய்க்காக தனது அமைச்சுப் பதவியையும் துறக்க தான் தயாராகவுள்ளதாக, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் சூளுரை விடுத்துள்ளார்.

ஹற்றன் போடைஸ் தோட்டத்தில் கொணக்கலை பிரிவில் சிறுவர் பராமரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, நேற்று அமைச்சர் பழனி திகாம்பரத்தின் தலைமையில் நடைபெற்றது.

இதில் உரை நிகழ்த்துகையிலேயே அமைச்சர் திகாம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நான் வாக்கு வாங்கியது நுவரெலியா மாவட்டத்தில். ஆனால் பதுளை, இரத்தினபுரி போன்ற இடங்களில் திகாம்பரத்திற்கு ஒரு இலட்சம் வாக்களித்தோம் என மக்களை தூண்டிவிட்டு வேடிக்கை காட்டுகின்றனர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆயிரம் ரூபாய் சம்பளத்தை பெற்றுத்தருவதாக நாம் கூறவில்லை. ஆனால் வாக்குறுதி அளித்தோம். தனி வீடு ஏழு பேர்ச் காணி, சிறுவர் பராமரிப்பு நிலையம் என்பன கட்டிக் கொடுப்பதும், பெற்றுக்கொடுப்பதுமாகவே நாம் வாக்குறுதிகளை வழங்கனோம். அதை நிறைவேற்றி வருகின்றோம்.

இடைக்கால கொடுப்பனவாக 2500 ரூபாவை இலவசமாக பெற்றுக்கொடுத்தோம். ஆனால் இதற்காக தேயிலை சபையில் நவீன் திஸாநாயக்க, ரவீந்திர சமரவீர ஆகிய அமைச்சர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கடதாசியை வைத்துக்கொண்டு போலியான பிரசாரங்களை என் மீது சிலர் திணித்து வருகின்றனர்.

வாயை திறந்தால் பொய்யான வாக்குறுதியும் கண்ணை திறந்து கொண்டிருக்கும் போது பகல் கொள்ளையும் செய்து வருகின்றவர்கள், எனது அமைச்சு பதவி ஊடாக செய்யப்படும் அபிவிருத்தி வேலைகளை பொறுக்க முடியாது, அமைச்சு பதவி ஆயிரம் ரூபாய்க்கு தடை என பொய்யான பிரசாரங்களை செய்து வருகின்றனர்.

ஆயிரம் ரூபாய்க்கு எனது அமைச்சு பதவி தடை என்றால் நிரூபிக்கட்டும் மக்களுக்காக அமைச்சை தூக்கி எறிய நான் தயார். அமைச்சுக்கும் கம்பனிக்கும் சம்பள ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுமேயானால் நான் பேச்சுவார்த்தையை செய்கின்றேன். ஆனால் சம்பள பேச்சுவார்த்தை தொழிற்சங்கத்துக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் நடக்கும் ஒன்றாகும். எந்த நிலையிலும் தொழிலாளர்களை காட்டிக்கொடுத்து முதலாளிமார் சம்மேளனத்திற்கும் அமைச்சு பதவியை வைத்துக்கொண்டு அரசாங்கத்திற்கும் சோரம் போக மாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 800 இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை

இலங்கையர்கள் 800 பேருக்கு இன்று இரட்டை பிரஜாவுரிமை வழங்கப்படவுள்ளதாக குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் பிரஜைகள் பிரிவின் பிரதிக் கட்டளையாளர் ஷாமிக கமகே தெரிவித்துள்ளார். பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்க இராஜ்ஜியம், சுவிட்சர்லாந்து, கனடா, பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்கே இரட்டை பிரஜாவுரிமை வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும், கட்டம் கட்டமாக அவர்களுக்கான இரட்டை பிரஜாவுரிமையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி கட்டளையாளர் தெரிவித்துள்ளார். இதுவரை 17,500 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் பிரஜைகள் பிரிவின் பிரதி கட்டளையாளர் ஷாமிக கமகே மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் சாமியன் அரசடி, சம்மந்தர் கடை, கிழவி தோட்டம், யாக்கரு, கப்பூது, கலிகை, வலிக்கந்தோட்டம், துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திர அம்மன் கோவிலடி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பெரியார்குளம் (பூந்தோட்டம்), வவுனியா நகரம், மடுக்கந்த பிரதேசம், நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம் வரை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார்குளம், நானாட்டான, எருவிட்டான், அறுகக்குன்று, அச்சங்குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### உடலோம்பல் இறைவழிபாடு



இவ்வளவு சாப்பிட்டால் போதும், நன்கு ஜீரணமாகும். உடல் நன்றாக இருக்கும் என்று தெரிந்து அளவோடும், முறையோடும் சாப்பிடுவோம். ஆனால், சுவையாக இருக்கிறது என்று அதிகமாகச் சாப்பிட்டால் அதை ஜீரணிப்பதற்கு வேண்டிய அதிகபடியான அமிலம் எங்கிருந்து சுரக்கும்? பற்றாக் குறையின் காரணமாக உணவு செரிக்காமல் தேங்கிப் போவதால் புளித்துப் போகிறது. அது வயிற்றில் புண்ணை உண்டாக்கித் துன்பம் தருகிறது. மனிதன் அறியாமையால் செய்யும் தவறுகள் தான் துன்பமாக விளைகிறது. இறையின் ஆற்றலால் எல்லாம் சரியாக நடக்கிறது.

ஆனால், நாம் ஆசையினால், மறதியினால், இறைவனின் செயலை மறந்ததினால் அதிகமாகச் சாப்பட்டோம். இறைவன் செயலில் குறுக்கிட்டோம். உறுப்புக் கெட்டுவிட்டது. அதன் விளைவாகத் துன்பத்தை அனுபவிக்கிறோம். இறையருள் எல்லாச் செயலிலும் கலந்து சரியான பலனைத் தந்து கொண்டே இருக்கிறது. நாம் அதைத் தடுத்தால் அந்தத் தடைக்குத் தகுந்தவாறு துன்பம் வரும். இதைத் தெரிந்து கொண்டால் இறைவனுக்குப் பயந்து நடக்க வேண்டுமென்று முன்னோர்கள் சொன்னது தவறா? தவறாகச் செய்தால் துன்பந்தான் வரும். சரியாகச் செய்தால் இன்பமே நிலைக்கும். இந்த உண்மையைத் தெரிந்து கொள்கிற போது இறையுணர்வு வருகிறது.

அதற்கு ஏற்றவாறு இந்த உடலுக்கு உணவு, ஓய்வு, எண்ணம், உழைப்பு இந்த ஐந்தையும் அலட்சியம் செய்யாமல். அதிகமாக அனுபவிக்காமல், முரணாக அனுபவிக்காமல் நாம் பார்த்துக் கொள்வோம். உடல் நலமாக இருக்கும். மனமும் அமைதியாக இருக்கும். அப்படி அறிவின் தெளிவோடு உடலை நலமாக வைத்துக் கொள்வதும் இறை வழிபாடு தானே?

# நவஜீவன்ஸ்சை வீழ்த்தியது குருநகர் பாடும்மீன் அணி



வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரில் லீக் சுற்றில் அண்மையில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் மற்றும் குருநகர் பாடும்மீன் அணிகள் மோதின.

ஆரம்பித்த 6 ஆவது நிமிடத்திலேயே பாடும்மீன் சார்பாக கிறிஸ்ரன் முதல் கோலை போட்டார். தொடர்ந்து சாந்தன் 15 ஆவது நிமிடத்திலும் மீண்டும் கிறிஸ்ரன் 21 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் போட முற்பாதியில் 3:0 என பாடும்மீன் முதன்மை பெற்றது.

தொடர்ந்து 28 ஆவது நிமிடத்தில் கிறிஸ்ரன் மீண்டும் ஓர் கோலை பதிவு செய்தார். பதிலுக்கு கோல் போட முயற்சித்த நவஜீவன்ஸ் அணி சார்பாக 42, 45 ஆவது நிமிடங்களில் இரு கோல்கள் பதிவாகின.

இதில் 42 ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணி சார்பாக ஓர் கோலை (own goal) நவஜீவன்ஸ் அணி பெற்றுக்கொண்டது.

அத்தோடு 45 ஆவது நிமிடத்தில் கௌதமன் ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார். எனினும் இறுதியில் பாடும்மீன் அணி 4:2 என்ற கணக்கில் வெற்றி பெற்றுக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக கிறிஸ்ரன் தெரிவானார். (க)

# வடக்கின் வல்லரசன் தொடரில் ஊரெழு றோயல் அணி வெற்றி



வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரில் லீக் சுற்றில் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மன்னார் ஜோசப்வாஸ் நகர் ஐக்கியம் மற்றும் ஊரெழு றோயல் அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஆட்டத்தின் 17, 18 ஆவது நிமிடங்களில் தனது சிறப்பான ஆட்டத்தின்மூலம் இரு கோல்களை பெற்றுக் கொடுத்தார் றோயல் வீரன் கோபன்.

தாமும் சளைத்தவர்கள் அல்ல என்பதை காட்டிய ஜோசப் வாஸ் நகர் ஐக்கியம் 20ஆவது நிமிடத்தில் ஜோன்சனின் அதிரடி மூலம் ஒரு கோலை பதிவு செய்ய ஆட்டத்தில் மேலும் அனல் பறந்தது.

இருப்பினும் றோயல் வீரன் நிதர்சன் அற்புதமான முறையில் 22, 28 ஆவது நிமிடங்களில் இரு கோல்களைப் போட்டார். மீண்டும் ஜோன்சன் அதிரடியாக 39 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பதிவு செய்ய பதிலுக்கு கோபன் 43 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப்போட்டார். எனினும் ஜோன்சனின் அபாரம் தொடர 46 ஆவது நிமிடத்தில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கியம் சார்பாக ஒரு கோல் பதிவாகியது. என்றபோதிலும் 49 ஆவது நிமிடத்தில் றோயல் சார்பாக நிதர்சன் ஒரு கோலைப் போட இறுதியில் 06:03 என்ற ரீதியில் றோயல் அணி வெற்றி பெற்றுக்கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக கோபன் தெரிவானார். (க)

# இளம் பறவைகள் உதைபந்தாட்டம் அலை ஓசை - யுனிபைட் இறுதிப் போட்டிக்கு தகுதி





சிலாவத்தை இளம் பறவைகள் வி.க நடத்தும் மாபெரும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல் அரை இறுதிப் போட்டியில் உடுப்புக்குளம் அலை ஓசை வி. எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் வி.கழகம் மோதியது.

இப் போட்டியில் உடுப்புக்குளம் அலை ஓசை வி.க 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மாலை நடை பெற்ற 2வது அரையிறுதிப் போட்டியில் வவுனியா யுனிபைட் வி.க. எதிர்த்து முள்ளியவளை வளர்மதி வி.கழகம் மோதியது.

இதில் வவுனியா யுனிபைட் வி.க தண்ட உதை மூலம் வெற்றியைப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (க)

# முதியோர்களுக்கான விளையாட்டு விழா





கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் முதியோர்களுக்கான விளையாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட கூட்டுறவாளர் மண்டப வளாகத்தில் நடத்தப்பட்டது.

இவ் விளையாட்டு விழாவிற்கான அனுசரணையை காவேரி கலாமன்றத்தினர் வழங்கினார்கள்.

கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் ஏற்கனவே நடத்தி முடிக்கப்பட்ட போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களிடையே மாவட்ட மட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களது விபரங்கள் வருமாறு.

ஆண்களுக்கான பலூன் ஊதி உடைத்தல் -1ஆம் இடம் வைத்திய நாகரட்ணம், 2 ஆம் இடம் சின்னராசா மனோகரன் , 3ஆம் இடம் இருவர் -சண்முகநாதன் விஜயபாலன், நாகமணி மகேந்திரன்.

ஆண்களுக்கான வேக நடை 1ஆம் இடம் நாகமணி மகேந்திரன் , 2ஆம் இடம் அப்புத்துரை ரகுபதி , 3ஆம் இடம் சின்னராசா மனோகரன் , பெண்களுக்கான கிடுகு பின்னுதல் - 1ஆம் இடம் திருமதி. மஸ்தியாம் பிள்ளை மரியம்மா , 2ஆம் இடம் திருமதி வேலாயுதம் பரமேஸ்வரி ,3ஆம் இடம் செல்வி. சுப்பையா வையந்திமாலா

பெண்களுக்கான நீர் நிரப்புதல் 1ஆம் இடம் -திருமதி புத்திநாதன் பிலோமினா , 2ஆம் இடம் திருமதி ஆ. மதுரைமீனாட்சி, 3ஆம் இடம் திருமதி பகபதி பூமணி

ஆண், பெண் இருபாலாருக்குமான சங்கீதக் கதிரையில் 3 பரிசுகளையும் ஆண்கள் மட்டுமே பெற்றனர்.1 ஆம் இடம் விநாயகமூர்த்தி தங்க வேலாயுதம் ,2ஆம் இடம் இராமசாமி தாமோதரம்பிள்ளை , 3ஆம் இடம் -நாகமணி மகேந்திரன்

இவர்களுக்குரிய பரிசில்கள் 24. 10.2016 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற உள்ள மாகாண முதியோர் தின விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது. (கு-28)

# குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டம்

## ஹென்றிஸ் வெற்றி



வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் உதைபந் தாட்ட தொடரில் லீக் சுற்றில் அண்மையில் நடைபெற்ற முதல் போட்டியில் பாஷையூர் சென் அன்ரனிஸ் மற்றும் இளவாலை யங்கென்றிஸ் அணிகள் மோதின. ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்திலேயே அற்புதமான ஒரு கோலை போட்டு அசத்தினார் ஹென்றிஸ் வீரன் தனேஸ்.

மாறாத ஆதிக்கத்துடன் தொடர்ந்த ஆட்டத்தில் அதிரடி காட்டிய மது 19வது நிமிடத்தில் ஒரு கோலை போட முற்பாதியில் 2:0 என ஹென்றிஸ் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து 30வது நிமிடத்தில் தனேஸ் வழங்கிய அருமையான பரிமாற்றத்தினை அற்புதமான கோலாக மாற்றினார் மது.

36வது நிமிடத்தில் ஹென்றிஸ் அணிக்கு கிடைத்த தண்ட உதை வாய்ப்பை கோலாக மாற்றினார் ஹென்றிஸ் கோல்காப்பாளர் அமல்ராஜ்.

ஆட்டத்தின் 42 வது நிமிடத்தில் தவறான பரிமாற்றத்தால் ஓர் கோலை அன்ரனிஸ் அணிக்கு வழங்கியது ஹென்றிஸ்.

மீண்டும் தனேஸ் 49 ஆவது நிமிடத்தில் ஒரு கோலை போட இறுதியில் 5:1 என்ற ரீதியில் ஹென்றிஸ் அணி வெற்றி பெற்றுக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகன் மது தெரிவானார். (க)

## ஜனாதிபதி மைத்...

விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் ஆன் சாங் சூகிற்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கையில் ஏற்பட்ட ஜனநாயக மாற்றங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஆன் சாங் சூகி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடைய அரசியல் வாழ்க்கை தொடர்பில் தன்னுடைய திருப்தியினையும் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக செயற்பட விரும்புவதாகவும் ஆன் சாங் சூகி மேலும் தெரிவித்தார்.

மியன்மாரானது புத்த பெருமானின் தந்ததாது பேணிப்பாதுகாக்கப்பட்டுவரும் கண்டி தலதா மாளிகைக்கு யானைக்குட்டியொன்றை அன்பளிப்பாக வழங்கும் என்றும் அவர் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## விபத்தில் காய...

ங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக குறித்த ஆசிரியரும் அவரது மனைவியும் யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சுவேலி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்துள்ளனர். பிற்பகல் 1.30 மணியளவில் அச்சுவேலி நாவற்காட்டு சந்திப்பகுதியைச் அவர்கள் அண்மித்த வேளை பருத்தித்துறை பகுதியில் இருந்து வந்த ஹன்டர் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை மோதியதுடன் அவர்கள் மேல் ஏறி 15 மீற்றர் தூரத்துக்கு இழுத்து சென்று அருகில் இருந்த தொலைபேசி மின்கம்பத்துடன் மோதியுள்ளது.

குறித்த ஹன்டர் சாரதிக்கு சாரதி அனுமதிபத்திரம் இல்லை என்பதுடன் அவர் அந்த இடத்தை விட்டு தப்பியும் ஓடியுள்ளார். இந்த நிலையில் படுகாயமடைந்த கணவனும மனைவியும் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்துள்ளனர். அதில் மேற்படி ஆசிரியருக்கு விபத்தின் போது கால் சிதைவடைந்ததால் ஒரு கால் துண்டிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் 12 நாட்களின் பின்னர் பிரஸ்தாப ஆசிரியர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் அதிகாலை உயிரிழந்துள்ளார். அவரது மனைவியாரான மேரி மாசோ (வயது 44) என்பவர் படுகாயமடைந்த நிலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-9-60)

## இனப்பிரச்சினைத்...

தெரிவித்தார்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஏறாவூர் கோட்டத்தில் ஐந்தாந்தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 74 மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஏறாவூரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம் பெற்றபோது முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இலங்கை வரலாற்றில் தொடரந்து தீர்வின்றித் தொடர்ந்து வருகின்ற ஒரு துரோகமாகும்.

இதுவரை காலமும் நடந்த பேச்சுவார்த்தைகளில் எவ்வாறு இழுத்தடிப்புக்கள் இடம் பெற்றதோ அதன் தொடராகவே இப்போதைய நகர்வுகளும் இருக்கின்றன.

அதிகாரப் பரவலாக்கல் அதோ வருகிறது இதோ வருகிறது என்று கூறப்படுவதெல்லாம் சிறுபான்மை இனங்களுக்குக் கூறப்படும் ஒரு பூச்சாண்டியைத் தவிர வேறொன்றுமில்லை.

இந்தப் பின்னணியை தொடர்ந்து செய்து கொண்டிருப்பதை மத்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டிய காலத்தின் தேவை இருக்கின்றது.

அதிகாரப் பகிர்வு என்று பொறிக்கப்பட்ட வெறும் போர்வையை மாத்திரம் மத்திய அரசு மாகாணங்களுக்கு போர்ததியிருக்கின்றது.

13ஆவது அரசியல் சட்டத்திருத்தத்திலே, குறிப்பிடப்பட்டிருக்கும் விடயம் மத்திய அரசால் மறுக்கப்பட்டு இந்தநாட்டிலே ஒரு அரசியல்யாப்பே கேள்விக் குறியாக்கப்பட்டிருக்கின்றது.

காணி, பொலிஸ், கல்வி அதிகாரங்கள மாகாண சபைகளுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றன. எழுத்துக்களில் மாத்திரம் அதிகாரப் பரவலாக்கம் நடமாடுகிறது.

13ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு மத்திய அரசிற்கு ஒரு நாள் கூட கால அவகாசம் தேவையில்லை. அதற்கொரு அமைதிப் பேச்சுவார்த்தையும் கூடத் தேவையில்லை.

கல்விக் கல்லூரி விடயம் என்பது ஒரு பாரிய சவாலான விடயமாக மாகாணத்திற்கு வந்திருக்கின்றது. கல்வி அமைச்சும், அதன் அமைச்சரும், அதன செயலாளரும் தன்னிச்சையாக தங்களுடைய விருப்பு வெறுப்புக்கேற்ப இந்த மாகாண ஆசிரியர்களை, இந்த மாகாணத்திலே வெற்றிடங்கள் இருக்கின்ற போது வெளிமாகாணங்களுக்கு அனுபபுகின்ற துரோகச்செயல் இடம்பெற்றுக் கொண்டிருப்பது நிறுத்தப்பட வேண்டும.

மத்திய அரசின் கல்வி அமைச்சர், செயலாளர் என்ற ஒரே காரணத்திற்காக மாகாணக் கல்வியை முடக்க நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

கல்விக் கல்லூரிகளில் இருந்து பயிற்சி முடித்து வெளியேறிய ஆசிரியர்கள் இந்த மாகாணத்திற்கே தரப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்குப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியமில்லை.

ஆயினும், ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர், அதன் செயலாளர், ஆளுநர் ஆகியோரிடம் மாகாண முதலமைச்சர் பிச்சை கேட்கின்ற அளவுக்கு மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட கல்வி அதிகாரங்களை மத்திய கல்வி அமைச்சு துஷ்பிரயோகம் செய்து வருகின்றது.

அரசியல் யாப்பில் கொடுபட்டிருக்கின்ற அதிகாரங்கள் பறித்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு அநாகரிகமான துரோகச்செயலாகும்.

அரசியல் யாப்பில் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டிருக்கின்றது என்று நீங்கள் கூறினால் ஏன் ஆசிரியர் நியமனங்களைச் செய்யும் அதிகாரத்தை நீங்கள் பிடுங்கிக்கொள்ள வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கலில் 95 வீதம் கல்விக்குக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் மாகாணத்திலே கல்விக்காக 95 வீத நிதியொதுக்கீடு மத்திய அரசினால் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

அதுமட்டுமல்ல, மாகாணத்திலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புகின்ற அதிகாரத்தைக் கூட மத்திய அரசு எமக்குத் தரவில்லை.

மாகாணக் கல்வியை கொச்சைப்படுத்துகன்ற விதத்தில் மத்திய அரசினுடைய கல்வி அமைச்சும், அமைச்சரும், அமைச்சினுடைய செயலாளரும் நடந்து கொள்கின்ற முறை வன்மையாகக் கண்டிக்கப்படத்தக்கது என கிழக்கு முதலமைச்சர் தெரிவித்தார். (செ)

## தற்கொலை செய்த...

2007 ஆம் ஆண்டு இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற 52 வயதான இளந்தாரிகே ஜயமான்ன என்ற குறித்த அதிகாரி கடந்த 14 ஆம் திகதி அவரது வீட்டின் சமயலறையில் தூக்கிட்டு தற்கொலை செய்திருந்தார்.

லசந்த விக்கிரமதுங்கவை தாமே கொலை செய்ததாக அவரது சடலத்திற்கு அருகில் கடிதமொன்றும் காணப்பட்டது. இந்த நிலையில் குறித்த கடிதம் இரசாயன பகுப்பாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் உள்ள கையெழுத்து தனது தந்தையின் கையெழுத்து போன்றே உள்ளதாக இளந்தாரிகே ஜயமான்னவின் மூத்த புதல்வர் கூறியுள்ளார்.

எனினும் இந்த கடிதத்தில் உள்ள கையெழுத்து குறித்த இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இன்றைய தினமே கிடைக்கும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இரகசிய பொலிஸாருக்கு எழுதப்பட்ட குறித்த கடிதத்தில் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள நபர் தனது நண்பர் எனவும் அவர் லசந்தவை கொலை செய்யவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி காணாமல் போயிருந்த ஜயமான்ன, 13ஆம் திகதி இரவே வீடு திரும்பியிருந்ததுடன், தான் சென்ற இடம் குறித்து குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் ஜயமான்னவின் கையடக்கத் தொலைபேசியிலுள்ள குறுந்தகவல்கள் மற்றும் தொலைபேசி அழைப்பு விபரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

எனினும் இந்த தகவல்களை தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனவும்,

தற்கொலை செய்வதற்கு முன்னர் அவர் எங்கு சென்றார் மற்றும் யாரை சந்தித்தார் என்ற தகவல்களை கண்டறிய வேண்டியுள்ளதாகவும் விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மைத்திரி-மோடி...



வருகின்றது எனக் குறிப்பிட்ட இந்தியப் பிரதமர், உடன்படிக்கைகள் மற்றும் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு இலங்கையுடன் உள்ள ஆழமான உறவின் காரணமாக இம் மாநாட்டில் பங்குபெற இலங்கையை அழைத்ததாகவும் தெரிவித்தார்.

BRICS-BIMSTEC மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைப்பு விடுத்தமைக்கு இந்தியப் பிரதமருக்கு நன்றி தெரிவித்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால, இலங்கை மற்றும் இந்தியாவுக்கான நீண்டகால நட்புறவை இது உறுதிப்படுத்துகின்றது எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கை கடினமான நிலைமைகளுக்கு முகம்கொடுக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் இந்தியாவின் உதவிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டு வருவதையும் ஜனாதிபதி மைத்திரிபால இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்தார். (செ-11)

## த.தே.கூ...

ள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில நடைபெறவுள்ள இந்த சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கையில் தமிழ்மக்கள் நீண்ட காலமாக பல்வேறு இன, மத ரீதியிலான இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்ற நிலையில் சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டிய தன் அவசியம் தொடர்பாக இச்சந்திப்பின் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 10 நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சிறுபான்மை இன விவகாரங்களை ஆராயும் விஷேட தூதுவர் வடக்குமாகாண அமைச்சர்கள், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மகிந்தவை மக்கள்...

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துக் கூறிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு.

மகிந்த ஆட்சியில் பொருளாதாரம் படுமோசமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. அந்த நிலைமையில் ஆட்சி தொடர்ந்திருந்தால் அவரால் வீதிக்குக்கூட இறங்க முடியாமல் போயிருக்கும். மக்கள் அவரை அடித்தே கொன்றிருப்பர்.

அதற்குப் பயந்து கொண்டும் ஜெனிவாப் பிரச்சினைக்கு பயந்துகொண்டும்தான் மகிந்த இரண்டு வருடங்கள் மீதமிருக்கும் போது முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார்.

இப்போது அவர்கள் இனவாதம் பேசுகின்றனர். விக்னேஸ்வரன் வடக்கில் ஏதோ சொல்லி இருக்கின்றார். விக்னேஸ்வரன் அதை ஒரு தடவைதான் சொன்னார். ஆனால், தெற்கு அரசியல்வாதிகள் எத்தனை தடவைகள் சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள் என்று பாருங்கள்.

வடக்கிலோ தெற்கிலோ இனவாதம் பேசினால் அவர் இனவாதிதான் என்பதில் சந்தேகமும் இல்லை. அந்த இரு தரப்பினரும் ஏற்படுத்துவது ஒரேமாதிரியான அழிவைத்தான். யார் என்ன சொன்னாலும் இனவாதத்துக்கு இடங்கொடுக்க மாட்டோம் என்ற வாக்குறுதியை நாம் இந்த நாட்டுக்கும் உலகுக்கும் வழங்கியுள்ளோம்.

தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் பேசுகின்ற பேச்சை தமிழர்கள் கேட்டால் வடக்கில் இராணுவம் இருப்பது தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்குத்தான் என்று அவர்களுக்கு நினைக்கத் தோன்றும். அங்குள்ள பொலிஸாரையும் இராணுவத்தினரையும் இனவாத சிந்தனைக்குள் ஈர்க்கவே இவர்கள் முயற்சி செய்கின்றனர்.

தங்கள் இனம் மீது பற்று இருந்தால் இனவாதத்தை எதிர்க்க வேண்டுமே தவிர ஆதரிக்கக்கூடாது. இனவாதம் பேசுகின்றவர்கள் எவராக இருந்தாலும் அவர்களின் இனவாத செயற்பாடுகளுக்கு நாம் இடங்கொடுக்க மாட்டோம் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்தார். (செ-11)

## விபத்துக்குள்ளான தபால் உத்தியோகத்தர் நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த தபால் உத்தியோகத்தர் ஒருவர் 8 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்

யாழ்.கச்சேரி கிழக்கை சேர்ந்த சிவகுமாரன் வர்னேந்திரன் (வயது 50) என்பவரே உயிரிழந்தவராவார்

இவர் கடந்த 8 ஆம் திகதி யாழ்.தபால் நிலையத்துக்கு சென்று கடமை முடித்துவிட்டு 11 மணியளவில் வீடு திரும்பிய பிரஸ்தாப நபர் சந்தியில் இருந்து ஒழுங்கையை கடக்க முற்பட்ட வேளை சாவகச்சேரி பகுதியில் இருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இவரை மோதித்தள்ளியுள்ளது.

இதில் படுகாயமடைந்த இவரை உடனடியாக மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

எனினும் 8 நாட்களின் பின் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் மாலை உயிரிழந்துள்ளார். பிரேத பரிசோதனையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

## துப்பாக்கியால் சுட்டு சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தில் கடமையாற்றும் விமானப் படைச் சிப்பாய் ஒருவர் தன்னிடமிருந்த துப்பாக்கியைக்கொண்டு சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு இடம் பெற்று இச் சம்பவத்தில் தனது நெஞ்சுப் பகுதியை துப்பாக்கியால் சுட்டுக் கொண்டுள்ள விமானப்படைச சிப்பாய், படுகாயமடைந்த நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிப்பாய் கரந்தெனிய, மாகல பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தற்கொலைக்கான காரணம் எதுவும் வெளியிடப்படாத நிலையில் இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகிறது. (செ)

## கொள்ளைபோன நகைகளுடன் இளைஞன் கைது

(ஏறாவூர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய காத்தான்குடி - 03, நெசவு நிலைய வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்து டன் தொடர்புடைய இளைஞர் ஒருவரை நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வீட்டில் கொள்ளையிடப்பட்ட ஐந்தரைப் பவுண் தங்கக் கழுத்தொட்டி மற்றும் கையடக்கதொலைபேசி ஒன்றையும் கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

காத்தான்குடியைச் சேர்ந்த 18 வயதுடைய இந்த சந்தேக நபர் சில மாதங்களுக்கு முன்னரே திருமணம் முடித்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகக் கூறிய பொலிஸார் சந்தேக நபரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். (செ)

## தனித்திருக்கின்ற...

இது தொடர்பில் முழுங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் முழுங்காவில் பொலிஸார் மற்றும் கிளிநொச்சி தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை 11 மணியளவில் ஜெயபுரம் தெற்குப்பகுதியில் உள்ள வீடொன்றில் நுழைந்த திருடர்கள் இதேபோல் வீட்டில் இருந்த கணவன், மனைவி மற்றும் கணவனுடைய அம்மா ஆகியோரை கொட்டன்களால் அடித்து மிரட்டி உட்கார வைத்து, 2 1/2 பவுண நகைகளை கொள்ளையடித்துள்ளனர்

இது தொடர்பாக நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் நாச்சிக்குடா பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்

நடைபெற்ற இரு கொள்ளைகளும் ஒரே வகையாக இருப்பதனால் இரண்டுக்கும் தொடர்பிருக்குமா அல்லது வெவ்வேறு திருட்டுக் கும்பல்களாக இருக்குமா என்ற சந்தேகத்தில் கிளிநொச்சி, முழுங்காவில், நாச்சிக்குடா பொலிஸார் ஒன்றாக இணைந்து பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் கடந்த செவ்வாய்க்கிழமையும் இதேபாணியில் கிளிநொச்சி முரசுமோட்டை பழையகமம் பகுதியில் உள்ள வீடொன்றில் வீட்டில் இருந்த வயதான தம்பதியர்களை கொட்டன்களால் அடிப்போம் எனப்பயமுறுத்தி வீட்டிலிருந்த 20 ஆயிரம் பணம் மற்றும் 5 1/2 பவுண் நகைகள் என்பவற்றை பறித்துச சென்ற சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-281-312)

## பிரதமர் நேற்று...

அதிகாலை 3:15 மணிக்கு கொழும்பில் இருந்து பெல்ஜியம் நோக்கி சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விஜயத்தின் போது இலங்கைக்கு மீண்டும் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை பெற்றுக் கொள்வது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்ட அதிகாரிகளுடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரதமரின் இவ் விஜயத்தின் போது, பெல்ஜியம் பிரதமரையும் அவர் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)


## ஒன்றுகூடுக

வணிகக்கல்வி ஆசிரியர் அமரர் B.S. பசில் ஆசிரியரின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்கு மாணவர்கள் ஆரியகுளம் வைரவகோவிலில் (ஸ்ரான்லி வீதி) இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்ள ப்படுகின்றீர்கள்.

-ஏற்பாட்டாளர்கள்

(6353)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் B.S.பசில்**

எமது சிரேஷ்ட ஆசிரிய நண்பர் (வணிகக்கல்வி) அமரர் B.S.பசில் அவர்களுடைய அமரத்துவம் அடைந்த செய்தியினையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

DCM கல்விச் சமூகத்தினர்-
(யாழ் நகர், சுன்னாகம்)

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில்...

**Data Entry Trainee**

*(Salary: 15,000 வரை)*

**Senior Marketing Executive**

*(Salary: 20,000 -50,000)*

தொடர்பு: **கோலாசிற்றி** தொழில் வங்கி
இல.224, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 0774336247

(6355)

## மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது

துன்னாலை பருத்தித்துறை பிரதான வீதி, மற்றும் கந்த முருகேசனார் சன சமூக சூழல், கிராமக்கோடு புனித அந்தோனியார் ஆலய சுற்றாடலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(6349) **0777147036**

## அமெரிக்க லொத்தர் விசா



**2018ல் நீங்களும் அமெரிக்காவில்...**

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

அரிய வாய்ப்பு - சில தினங்களுக்கு மட்டுமே **0768226230**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 19 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|
| 0768226241 | 0768226240 | 0776699892 | 0768226237 | 0776697960 |

(C-6107)

மேலும் தகவல்களுக்கு--> www.facebook.com/v2tandt

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## கண்ணீர் காணிக்கை



வடபுலத்தின் முன்னணி ஆசிரியரும் பல்லாயிரம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவரும் எமது ஆசிரியரும் எமது கல்வி நிறுவன ஆசான்களில் ஒருவருமான

**வணிகக்கல்வி**
**பெனடிக்ற் பசில் ஜெனதாஸ்**

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர்க் காணிக்கையை சமர்ப்பணம் செய்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணக்கீட்டுக் கல்லூரி (AC) (கல்வியங்காடு),
உயர்தரக் கணக்கீட்டு நிறுவனம் (AAC) (அரியாலை)
- ஆசிரியர்கள், மாணவர்கள்

(6351)

## அதிர்ச்சியடைவதுடன் கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்



(6354)

எமது வணிகக்கல்வி பேராசான்

**அமரர் B.S. பசில் ஜெனதாஸ்**

அவர்களின் திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதுடன் ஆசிரியரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

மாணவர்கள்
க.ஸ்ரீபரன் (A/L 1999), ப.பகீரதன் (A/L 2001)

## ஆங்கிலம் கற்க ஆர்வமாக உள்ள உங்களுக்கான சிறந்த வழி

I. இலகுவான புதிய வழியில் கற்பித்தல் முறை.
II. தெளிவாகவும், திருப்திகரமாகவும், கற்பித்தல் முறை.
III. பல ஆண்டுகளாக பயிற்சி பெற்ற ஆசிரியர் குழாம்.
IV. 3 மாத காலப்பகுதி (வார நாட்கள்/வார இறுதி நாட்கள்)

English
Language
Easy
Learning
System

நீங்கள் பணத்தை நிறுவனத்துக்குச் செலுத்துவதற்கு முன்னர், இலவசமாக ஒருநாள் வகுப்பு கற்பிக்கப்படும். அதில் நீங்கள் பங்குபற்றி திருப்திகரத் தன்மை அடைந்து உங்களுக்கு எங்கள் வகுப்பில் நம்பிக்கை உண்டானால் மட்டும் உங்கள் பணத்தைச் செலுத்தி வகுப்பைத் தொடருங்கள்.

Contact us : (C-6133)

**ROCK International** 377,Kasthuriyar Road, Jaffna. 021 320 3569, 076 896 4055



## அவதானமாக இருங்கள்



மிக குறைந்த கட்டணத்திலான வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

பொதிகள் சேவை தொடர்பான சர்வதேச சட்டம் மற்றும் ஒழுங்கை மீறும் வகையில் குறைந்த கட்டணத்தில் அனுப்பப்படும் பொதிகள் பாதுகாப்பாக உரிய நேரத்தில் சென்றடைவது சாத்தியமற்றதே.

நியாயமான கட்டணத்தில் நிறைவான பொதிகள் சேவையை 20 வருட காலமாக வழங்கி வரும் நாம்

மிகச் சரியான தெரிவு **அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்** Tel : 021 222 3536
இல.10, கஸ்தூரியார் வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

(C-6063)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.